பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 தை 17, திங்கட்கிழமை 30.01.2017 கதிர் 86

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading.
WELLA Hair Dressing
Ladies & Gents
வெலா சலூன்
இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

## மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக்கியமை தாம் வாழ்வில் செய்த பெரும் தவறு என்கிறார் சந்திரிகா



கொழும்பு, ஜன.30

கடந்த 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக பிரேரித்தமையானது தனது வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய தவறு என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தனதுஅரசாங்கத்தில்மஹிந்த ராஜபக்ஷவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை தான் வழங்கினார் எனவும்அதன்போதுமிகவும்மகிழ்ச்சியுடன் தன்னிடம் வந்த அவர் நன்றி எனக் கூறினார் எனவும் சந்திரிகா தெரிவித்தார்.

வாரப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இதனைக் கூறியுள்ளார்.

"அரசாங்கம் தற்போதைய வேகத்தை விட வேகமாக பணியாற்றினால்தான் அது எனக்கு திருப்தி தரும். அரசாங்கத்தில் தற்போது அமைச்சர்களாக

பக்கம் 19 »

# புதிதாக அரசமைப்பை தயாரிப்பதில் தடங்கல்

## பெரும் பின்னடைவு நிலை என ஒப்புக்கொள்கின்றார் சுமந்திரன்



**கொழும்பு, ஜனவரி 30**

**புதிய அரசமைப்புத் தயாரிப்புப் பணிகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் ஒப்புக்கொண்டுள்ளார்.**

**அரசமைப்புத் தயாரிப்புப் பணிகளில் முன்னர் பாரிய முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் தற்போது அதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.**

சிறிலங்காசுதந்திரக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் அரசமைப்புத் தயாரிப்புப் பணிகளில் இதுவரை இணைந்து இயங்கியமைக்கு மாறான கருத்துக்களை இப்போது கூறுவதற்குத் தலைப்பட்டுள்ளனர்.

இதனால் அரசமைப்புத் தயாரிப்புப் பணிகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. புதிய அரசமைப்புப் பணிகள் முற்றுமுழுதாக சுமுக

பக்கம் 20 »

## மன்னாரில் மீன்பிடிக்கக் குல்லாப் படகில் சென்ற தந்தையும் 9வயது மகனும் சாவு!

மன்னார், ஜன.30

மீன்பிடிப்பதற்காககுல்லாப்படகில் கடலுக்குச் சென்ற தந்தையும் அவரோடு கூடச்சென்ற மகனான சிறுவனும் உயிரிழந்தனர். படகு கவிழ்ந்து கடலில் மூழ்கியமையாலேயே அவர்கள்

பக்கம் 20 »

## திருமலைக் கடலில் குளிக்க சென்ற இருவரைக் காணோம்!

திருகோணமலை, ஜன.30

திருகோணமலை அலஸ் தோட்ட கடலில் நீராடச் சென்ற மூன்று இளைஞர்களில் இருவர் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமற்போயினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றையவரை அந்தப் பிரதேச மீனவர்களும் பொலிஸாரும்

பக்கம் 20 »

## இலங்கையில் சித்திரவதைகளா? இல்லவே இல்லை என்கிறது அரசு!

### ஐ.நாவுக்கு மறுப்பு அறிக்கை வழங்கப்படுமாம்

கொழும்பு,ஜன.30

இலங்கையில் தற்போதைய அரசிலும்சித்திரவதைகள்தொடர்கின்றன என ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் தலைவர் பேராசிரியர் யுவான் மெந்தெஸ் தெரிவித்த கருத்தை நிராகரித்துள்ள அரசு பதில் அறிக்கை ஒன்றை ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் சமர்ப்பிக்கவுள்ளது.

பக்கம் 19 »

### சுமந்திரனைக் கொல்லும் முயற்சி:

## புனர்வாழ்வு பெற்ற போராளிகள் சம்பந்தப்பட்டிருக்க மாட்டார்கள்!

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உறுதி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்யும் முயற்சியில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள்தொடர்புபட்டிருப்பர் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்வதற்கு முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் நால்வர் திட்டமிட்டுள்ளனர்எனத்தகவல்கள்வெளியாகியுள்ளமை தொடர்பில் கருத்துத்

பக்கம் 20 »

அளப்பு அருணாசலம்



அப்ப... 2017 இலிலையும் நடவாது எண்டு சொல்லுங்கோ...!

## லசந்த படுகொலைக் குற்றச்சாட்டு: நேரடியாக ராஜபக்ஷக்களை நோக்கி!

கொழும்பு, ஜன.30

'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர்லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப்பொலிஸாரினால்சில தினங்களுக்கு முன்னர் சுமார் ஐந்து மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதியும் பிராந்திய அபிவிருத்தி அமைச்

பக்கம் 19 »

## 'மிக்' கொள்வனவு ஊழலை அம்பலப்படுத்த முயன்றமையால்தான் லசந்த படுகொலை

### கோட்டா அணியைச் சாடி ராஜித கருத்து

கொழும்பு,ஜன.30

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான 'மிக்' விமானக் கொள்வனவு ஊழல்வாதிகள் தான் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவைக் கொலை செய்தனர் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஊடகம் ஒன்

பக்கம் 19 »

# அமெரிக்கா விரட்டிய அகதிகளை கனடா மக்கள் அரவணைப்பார்கள்

## அந்த நாட்டு பிரதமர் பகிரங்க அறிவிப்பு



அமெரிக்கா விரட்டிய அகதிகளைத் தாங்கள் அரவணைப்பார்கள் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பகிரங்கமாக அறிவித்துள்ளார். தனது நாட்டு மக்களும் அந்த அகதிகளை வரவேற்கின்றனர் எனவும் அவர் கூறியிருக்கின்றார்.

அமெரிக்கஏகாதிபத்தியத்தின் புதிய ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் புறக்கணித்த அகதிகளைத் தான் வரவேற்கிறார் என கனடா பிரதமர் அறிவித்தமையை உலகின்பலநாடுகள் வரவேற்றுள்ளன.

ஈராக், ஈரான், சிரியா, லிபியா, யெமன், சூடான் மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளிலிருந்து வரும் குடியேற்றவாசிகளைத் தடுத்து வையுங்கள் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிகாரிகளுக்குஉத்தரவிட்டார். இதனால் முஸ்லிம் நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

மேலும், அமெரிக்காவின் விமான நிலையங்களில் மேற்படிநாடுகளில்இருந்துவந்த மக்கள் அமெரிக்காவின் விமான நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்எனச்செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன் பின்னணியிலேயே அமெரிக்கா விரட்டிய அகதிகளைத் தாங்கள் பொறுப் பேற்பார்கள் என கனடா பிரதமரின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கனடா பிரதமர் அமெரிக்க அதிபரின் செயற்பாட்டை விமர்சிக் கவில்லை. ஆனால், அமெரிக்காவால் விரட்டப்பட்ட அகதிகளைத்தான் வரவேற்கிறார் எனத் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் இருந்துதான் அமெரிக்காவிற்கு 75 சதவீத பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அப்படி இருந்தும் அகதிகளின் துயரங்களைத் துடைக்க கனடா பிரதமர் எடுத்துள்ள இந்தமுடிவு அவரைசர்வதேசரீதியாக மாவீரனாக உயர்த்தியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2015 ஆம் ஆண்டு சிரியா நாட்டின் அலன் குர்டி என்ற மூன்று வயதுச் சிறுவன் துருக்கிகடற்கரையில்பிணமாக மீட்கப்பட்ட நிகழ்வு உலகத்தையே உலுக்கியது. அந்தச் சிறுவனின் உறவினர்கள் கனடாவில் இருந்தனர்.

இந்தச்சம்பவம்அந்தஆண்டு நடைபெற்ற கனடா நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதில் இருந்து அகதிகள் மீது கனடா மக்களின்கருணைமுன்பைவிட அதிகரித்திருக்கின்றது.-எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கேப்பாபிலவு மக்களின் காணிகளில் ஓர் ஏக்கர் கூட விடுவிக்கப்படவில்லை

## படையினர் கூறியது முழுப் பொய் என்கிறார் ரவிகரன்



முல்லைத்தீவு, ஜன.30

கேப்பாபிலவு மக்களின்காணிகளில் ஓர் ஏக்கர் நிலம் கூட படையினரால் விடுவிக்கப்படவில்லை என வடமாகாண சபை உறுப்பினர்துரைராசாரவிகரன் தெரிவித்துள்ளார். கேப்பாபிலவில் 235 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது என படையினர் கூறியிருப்பது அப்பட்டமானபொய்என்றும்அவர்தெரிவித்தார்.

தமது தாய் மண்ணில் மீளக் குடியேறும் வரை அப்பிரதேச மக்கள் தொடர்ந்தும் போராடுவார்கள் எனவும் அதற்கு, தான் துணைநிற்பார்எனவும்ரவிகரன் மேலும் தெரிவித்தார். .

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கேப்பாபிலவுஎன்பதுவன்னிப் பெருநிலப்பரப்பின் பூர்வீகக் கிராமங்களில் ஒன்றாகும். இது தொடர்பாக இலங்கை பிரித்தானிய காலனித்துவத்துக்கு உட்பட்டிருந்த காலத்தில் இலங்கையை நிர்வகித்த பிரித்தானிய ஆளுநர்களில் ஒருவரான J.P.லூயிஸ் என்பவர் தன்னுடைய Manual of the Vanni Districts என்றநூலில்தெளிவாக குறிப் பிட்டுள்ளார்.

நந்திக்கடல் களப்பையும் வளம்சேர் நிலப்பகுதியையும் கொண்ட இக்கிராமத்தில் இயற்கையோடுஒன்றி அமைதியான வாழ்வை நடத்தி வந்த இக்கிராமத்தின் பூர்வீகக் குடிகளை 2009இல் நடந்து முடிந்த கொடியபோர்இடம்பெயரச்செய்தது.

2016இல் முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பாலான குடும்பங்கள் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேறிய போதும் கேப்பாபிலவு மக்களுக்குசொந்தஇடத்திலானமீள் குடியேற்றம் என்பது எட்டாக்கனியானது.

இவர்களுடையகுடிநிலங்கள், விளைநிலங்களை முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தலைமையகம் ஆக்கிரமித்துக் கொண்டது.

இவர்கள் தமது சொந்தக் கிராமத்தின் அருகே உள்ள சீனியாமோட்டைக்கிராமத்தில்வழங்கப்பட்ட 20 பேர்ச் காணிகளில் வீடுகள் என்ற பெயரில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட 3 லட்சத்து 50ஆயிரம்ரூபாபெறுமதியான கூடுகளில் வற்புறுத்திக் குடியமர்த்தப்பட்டனர்.

கண்ணெதிரே தமது பூர்வீகக் காணிகளில் தம்மால் நடப்பட்ட வான்பயிர்கள்காய்த்துகனிந்து குலுங்குவதையும் அங்கு இராணுவம் உல்லாச வாழ்வு வாழ்வதையும் ஏக்கத்துடன் பார்த்து இவர்களது வாழ்வு கழிந்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமை ஆணையத்தின் சாசனங்கள், விதிகளுக்கமைய கேப்பாபிலவுமக்கள்உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களாகவே இன்றும் கருதப்பட வேண்டிய நிலையில் உள்ளனர்.

இருந்தபோதும்முல்லைத்தீவு மாவட்டச் செயலகப் புள்ளிவிவரங்கள் இவர்களை மீள்குடியமர்ந்தவர்களாகவே காட்டி நிற்கின்றதும்வேதனையைத்தரும் விடயமாகும். கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி அடிக்கடி போராட்டங்களையும் உண்ணா விரதங்களையும் மேற்கொண்டிருந்தனர்.

இதனால் இலங்கை நிர் வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகள், சட்ட வல்லுநர்கள் அடங்கிய ஒரு குழுவினரை இப்பிரச்சினையை ஆய்வு செய்வதற்காக வடக்கு மாகாண முதலமைச்சர் நியமித்தார்.

இக்குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை இராணுவத்தினர் தமது இராணு வத் தலைமையகத்தை தற்போது அமைந்துள்ளஇடத்துக்குதென் மேற்காக நகர்த்த வேண்டும் என்றும்கேப்பாபிலவுமக்களை தங்கள் சொந்த இடங் களில் குடியமர்த்த வேண்டு மெனவும் விதந்துரைத்தது.

இவ்வறிக்கையின் நகல்கள் முதலமைச்சரால் நல்லாட்சி அரசின் ஜனாதிபதிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் உசைனுக்கும் இலங்கை மீது அழுத்தம்கொடுக்கக்கூடியநாடுகளின் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

இதனால் இராணுவத்தினர் தமது முல்லைத்தீவு மாவட்ட தலைமையகத்துக்கு கேப்பாபிலவு மக்களை அழைத்து அவர்களது குடியிருப்புக்காணிகளைத் தாம் விடுவிக்க உள்ளனர்எனநம்பிக்கையூட்டிஅவர்களது போராட்டத்தை தளர்வடையச்செய்தனர்.ஆனால்இவர்கள் கேப்பாபிலவு மக்களின் குடியிருப்புக் காணிகளில் ஒரு சதுர அங்குலத்தைக் கூட விடுவிக்கவில்லை.

சீனியாமோட்டைப்பகுதியில் வற்றாப்பளை மக்கள் 42 பேருக்குசொந்தமான78ஏக்கர் மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்குரிய காணிகளும், சூரிபுரம் பகுதியில் தற்போது இலங்கையில் இல்லாத ஒருவருக்கு சொந்தமான 70 ஏக்கர் காணியையும் இன்னொருவருக் குச் சொந்தமான6ஏக்கர்காணியையும், மொத்தமாக 154 ஏக்கர் காணிகளே 25.01.2017 இல் வித்தியானந்தாக் கல்லூரியில் வைத்து விடுவிப்பதாக சான்றிதழ் வழங்கப்பட்ட காணிகளாகும்.

ஆனால் அன்றைய தினம் 235 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டதாக இராணுவத்தால் பொய்ப்பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. இது இலங்கை இராணுவத்தின் கூற்றுக்களின் நம்பகத்தன்மை அற்ற நிலையை காட்டி நிற்கின்றது.

வெளிப்படையாக நன்றாகத் திட்டமிட்டுஏமாற்றப்பட்டகேப்பாபிலவு மக்கள் 25.01.2017 அன்று அமைதிவழிப் போராட்டம் ஒன்றை தமது கிராமத்தில் நடாத்தினார்கள்.

இனிவரும்நாள்களில்அம்மக்களைஎவரும்ஏமாற்றமுடியாது. தமது தாய் மண்ணில் தாம் குடியேறும் வரை அம்மக்கள் தொடர்ந்தும் போராடுவார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில்இம்மக்களுக்குஎன்றும் நான் துணைநிற்பேன். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-81)

# கல்கிஸைக் கடலில் நீராடிக்கொண்டிருந்த ரஷ்ய யுவதிக்கு பாலியல் துன்புறுத்தல்

## இரு பொலிஸார் கைது, ஒருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜன.30

கல்கிஸைக் கடற்பரப்பில் நீராடிக் கொண்டிருந்த ரஷ்ய பெண் ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தினர் என்ற சந்தேகத்தில் இரு பொலிஸார் கைது செய்யப்பட்டுகல்கிஸை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களில் ஒருவரை எதிர் வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், மற்றையவரை 2 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்கிஸைக் கடலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட யுவதி கரையில் உயிர் காப்பு பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தார். இதனையடுத்தே இரு பொலிஸாரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இன்று கல்கிஸை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர் சாரதி எனவும் மற்றையவர் பாதுகாப்பு அமைச்சுப் பிரிவைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொலிஸார் கந்தளாய் மற்றும் மிரிஹான பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வருகின்றது. (ம)

# திருமலையில் அமெரிக்க போர் முகாம் நாட்டின் சுயாதிபத்தியத்துக்கு ஆபத்து!

## முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



கொழும்பு, ஜன.30

அமெரிக்காதனதுபோர்படை முகாமைதிருகோணமலையில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. எனவே, அங்கு அமெரிக்காவின்போர்க்கப்பல்களும் வரவுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் எமது நாட்டின் சுதந்திரம் மற்றும் சுயாதிபத்தியம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

“இலங்கையை நெருக்கடியான நிலைக்கு தற்போதைய ஆட்சியாளர்கள் கொண்டுசெல்கின்றனர். தேசிய விடயங்கள் எதனையும் கருத்தில் கொள்ளாமல் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் எமது பரம்பரையினரே அதிகளவில் பாதிக்கப்படவுள்ளனர்.

நாட்டை அபிவிருத்தி செய்வதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் பொருளாதார ரீதியில் பின்னடைவான நிலைக்கே நாட்டைக் கொண்டு செல்கின்றனர். அதனால் சர்வதேச நாடுகளும் இலங்கை மீது நம்பிக்கை இழந்துள்ளன. மேலும் உலகளாவியரீதியில் ஊழல்நிறைந்த நாடுகளின் வரிசையில் தற்போது இலங்கை முன்னிலைக்கு வந்துள்ளது.

பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்தமையால் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்குவிற்பனைசெய்து அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

மேலும் கடந்த காலங்களில் மக்கள் போராடிப்பெற்றுக் கொண்டசலுகைகளையும் இல்லாமலாக்குவதற்கு முயற்சிக்கின்றனர். இலவசக்கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவற்றையும் நீக்குவதற்கு ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்” - என்றார்.

### இணைத் தலைவர் பதவி பறிக்கப்பட்டது

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவர் பதவியில் இருந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் ப்ரியங்கர ஜயரத்ன நீக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பானகடிதம்ஜனாதிபதியின் செயலாளர் ஊடாகத் தனக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என ப்ரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

2010ஆம்ஆண்டுமுதல்புத்தளம் மாவட்ட அபிவிருத்திகுழுவின் தலைவராக செயற்பட்ட ப்ரியங்கர ஜயரத்ன, அண்மையில் அரசு பக்கத்தில் இருந்து கூட்டு எதிரணிப் பக்கம் தாவினார் என்பது தெரிந்ததே.

ப்ரியங்கர ஜயரத்னவின் இணைத் தலைவர் பதவிக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லைஎனதெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# இராணுவத்தை வாபஸ்பெறாது சேவையாற்றுவது எமது மக்களை விலைக்கு வாங்குவதாக அமையும்

## கிளிநொச்சியில் நேற்று நடந்த நிகழ்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரன்

கிளிநொச்சி, ஜன.30

எமது மக்களுக்காகவே நாம் யாவரும் பாடுபடுகின்றோம். ஆனால், அதில் அரசியலும் கட்சியியலும் சேரும் போதுதான் சிலமுரண்பாடுகள் ஏற்படுகின்றன. மத்தி மக்கள் சேவையில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கதே. ஆனால், எமது உரித்துக்களைத் தராது, முகாமிட்டிருக்கும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் இராணுத்தினரை வாபஸ் பெறாது எம் மக்கள் சேவையில் ஈடுபடுவது எம்மக்களை விலை கொடுத்துவாங்குவதாகவே அமையும். இது இவ்வளவும் அரசியல் சம்பந்தமான என் கருத்துக்கள். அவற்றைக் கூற வேண்டியது எனது கடமை என்று நினைத்துக் கூறியுள்ளேன்.

-இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

மயூரபதி ஆலய நலன்புரி சங்கத்தால் கல்விசார் உதவி ஊதியம் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு:-

அரசியல் என்பது எப்பேர்ப்பட்டது என்பது இப்பொழுது தான் தெரிந்துகொண்டு வருகின்றேன். பணம்கொடுப்பவர்கள் ஒருசாரார், பலன் எடுப்பவர்கள் இன்னொருசாரார். ஆனால், அந்தக் கைங்கரியத்தில் குளிர் காய்பவர்கள் மூன்றாந் தரப்பார். எங்களால்தான் உங்களுக்கு இது கிடைத்தது. ஆகவே, அடுத்த தேர்தலில் எமக்கு வாக்குப் போடுங்கள் என்பார்கள் சிலர். அல்லது தமிழ் மக்களுக்கு நாம் செய்யும் சேவை களைக் கண்ணுற்றீர்களா என்று ஜெனிவாவில் கேட்பார்கள் மறுசிலர். மாகாண முதலமைச்சரும் இதில் பங்குபற்றியமையால் வடக்கும் தெற்கும் இணைந்துவிட்டது பார்த்தீர்களா? ஆகவே நல்லிணக்கம் ஏற்பட்டுவிட்டது என்பார்கள் அவர்கள். இவையெல்லாம் எமது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு உரிய உரிமைகள் தரப்படாமலே கூறப்படுகின்ற கூற்றுக்கள். அதைத்தான் நான் இங்கு கூற வருகின்றேன்.

தென் ஆபிரிக்காவில் அரசியல் ரீதியான ஒரு தீர்வு பெற்ற பின்னரே உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இங்கு எம் மக்களுக்கு ஒரு சந்தேகம் உண்டு. மத்திய அரசு அதைச் செய்து இதைச் செய்துவிட்டு மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்வைத் தராதுவிட்டுவிடுமோ என்ற ஒரு ஐயம் எம்மைப் பீடித்தே இருக்கின்றது.

1987 ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய உடன்பாடு ஏற்பட்டபோது மாவட்ட செயலர் வடமாகாண அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார். எனவே, இப்பேற்பட்ட நடவடிக்கைகள் நடைபெறும்போது அவை எமக்குத் தெரிந்தே நடைபெற்றன.

1992 இல் உங்கள் எல்லோரதும் நண்பர் ஜனாதிபதி பிரேமதாச ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து மாகாண அரசின் கீழ் இருந்த மாவட்ட செயலர், கிராம சேவையாளர் போன்றவர்களை மத்தியின் கீழ்க் கொண்டு வந்துவிட்டார். அதனால் நிர்வாகம் இரண்டாகப் பிளவுபட்டது. ஒன்று மத்திய அரசின் கீழும் மற்றையது மாகாண அரசின் கீழும் முன்னெடுக்கப்பட்டன.

முன்னைய அரசின்கீழ் மூடியவாறே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதைய அரசின் கீழ் நிலைமை சற்றுச் சீரடைந்துள்ளது. வெளிப்படைத் தன்மை சற்றுப் புலப்படுகின்றது.

தெற்கில் இருந்து வரும் சகோதரர்களையோ, மத்திய அரச பிரதிநிதிகளையோ வரவேற்பதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.



சென்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எமது கிளிநொச்சி அரச அதிபர் பற்றிச்சில வார்த்தைகள் கூறினேன். சென்ற அரசின் கீழ் நாங்கள் ஒருமித்துச் செயலாற்ற முற்பட்ட போது சில பல சந்தேகங்கள் எம்முள் இருந்தன.

இந்த அரசு வந்தபின் அவை படிப்படியாகக் குறைந்து ஒரு சுமுகமான உறவை மத்திய அரசின் முகவரான மாவட்டச் செயலாளருடன் எம்மால் தற்பொழுது பேணமுடிகின்றது என்றேன்.

எமது மக்களுக்காகவே நாம் யாவரும் பாடுபடுகின்றோம். ஆனால், அதில் அரசியலும் கட்சியியலும் சேரும் போதுதான் சிலமுரண்பாடுகள் ஏற்படுகின்றன. மத்தி மக்கள் சேவையில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கதே. ஆனால் எமது உரித்துக்களைத் தராது- முகாமிட்டிருக்கும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் இராணுத்தினரை வாபஸ் பெறாது- எம் மக்கள் சேவையில் ஈடுபடுவது எம்மக்களை விலை கொடுத்துவாங்குவதாகவே அமையும். இது இவ்வளவும் அரசியல் சம்பந்தமான என் கருத்துக்கள். அவற்றைக் கூறவேண்டியது எனது கடமை என்று நினைத்துக் கூறியுள்ளேன்.

இனி இந்த நிகழ்ச்சிக்கு வருவோம். சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் எமதுமக்களுக்கு உதவிகள் வழங்கும் போது வேறு ஏதேனும் செயல் திட்டங்களை நாங்கள் நடைமுறைப்படுத்த. வேண்டுமா என்று நண்பர் சுந்தரலிங்கம் கேட்டார். ''ஆம்! வன்னியிலே எம்மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள்''என்று கூறிக் கல்வியில் அவர்களின் பின்தங்கிய நிலை பற்றி அவருக்கு எடுத்துரைத்தேன். அடுத்த வருடம் ஏதேனும் ஒரு செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று கூறினார். அந்தசெயற்திட்டமே இது.

500 குழந்தைகளைக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து மத்திய அமைச்சுக்கள் மூலம் தேர்ந்தெடுத்து மாதாந்தம் ஆயிரம் ரூபாவை அந்தக் குழந்தைகளின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பில் இடுகின்றாங்கள். மூன்று மாதங்களுக்கான முற்பணமாக மத்திய அமைச்சுக்குக் கட்டி, அமைச்சு குழந்தைகள் பெயரில் கணக்குகளைத் திறந்துள்ளது. எனவே, 36 மாதங்களுக்கு 500 மாணவர்களுக்குத் ஆயிரம் ரூபா வீதம் 180 லட்சம் ரூபா வைப்பில் இடப்படவிருக்கின்றது.

கொழும்பு அன்னை மயூரபதி அம்மனின் பெயரால் நடத்தப்படும் இந்தச் சங்கம் மக்கள் நலம் கருதி வருடா வருடம் செய்துவரும் சேவைகளும் பணிகளும் மகத்தானவை. அந்த விதத்தில் எம் குழந்தைகளுக்குக் கல்வி ஆதாரமாக வழங்கப்படும் ஊதியம் குழந்தைகளைக் கல்விமீது கரிசனை கொள்ள வைக்கும் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது.

உண்மையான வறுமையை, வன்னியின் தொலைவிலுள்ள கிராமங்களில்தான் பார்க்க முடிகின்றது. உண்மையான வறிய குடும்ப மாணவர்களுக்கு இந்தப் பணம் சென்றடையுமென்றால் எல்லோரையும் விட மகிழ்ச்சி அடைபவன் நானாகவே இருப்பேன். அரசியல் காரணங்களுக்காகவோ தனிப்பட்ட காரணங்களுக்காகவோ வறுமைக் கோட்டுக்குள் மேல் வாழும் சில குடும்பங்களைத் தேர்ந்தெடுத்திருக்கமாட்டார்கள் என்று நம்புகின்றேன்.

இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற குளறுபடிகள் பலர் அறிந்தவையே!. அதில் மத்திய அமைச்சர்களின் செயற்பாடுகளும் மக்கள் அறிந்தவையே!.அவ்வாறான குளறுபடிகள் நடைபெறவில்லை என்றால் எமக்கு மகிழ்ச்சியே.

இது முழுக்க முழுக்க மத்திய அரசின் அனுசரணையுடன் நடத்தப்படும் ஒரு கூட்டம். பிரதமர் அலுவலகம், மத்திய அரசின் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, மத்திய அரசின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஆகியன சேர்ந்து இதனை நடத்துகின்றன. பணத்தை மட்டும் மயூரபதி அம்மன் நலன்புரிச் சங்கத்தில் இருந்து கொடுத்துள்ளார்கள். ஒழுங்கமைப்பு மத்திய அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மாகாண சபையூடாக நடத்தியிருந்தால் எங்கள் மனமகிழ்ச்சி இரட்டிப்பாக இருந்திருக்கும். ஆனால், எமது மக்களுக்கு நன்மை கிடைக்கின்றது என்றால் நான் அதற்கு முன்னுரிமை கொடுத்துவருபவன். எனவே, மனமுவந்து இந்நிகழ்வில் கலந்துகொள்ளவந்துள்ளேன். மேலும் சகோதரி விஜயகலா எம்முடன் இணைந்து செயலாற்றி வருகின்றமை எமக்கு மகிழ்வைத் தருகிறது.-என்றார்.

(ஐ)

# வாகனத்தின் நிறம், உருவத்தை மாற்றியமைத்திருந்தால் தண்டம்

## அநேக சாரதிகளுக்கு சட்டமுறைமை தெரியாமல் உள்ளது; அதிகூடிய அபராதம் ஒரு லட்சம் என்கிறார் சாவகச்சேரி நீதிவான்

வாகனப் பதிவுப் புத்தகத்தில் உள்ள உண்மையான நிறத்தை மாற்றுதல் மற்றும் வாகனத்தை உருமாற்றம் செய்தல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளுக்கு 50 ஆயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபாவரை அபராதம் விதிக்க முடியும் என்று சாவகச்சேரி நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் வாகன சாரதிகளுக்கும், போதிய சட்டமுறை தெரியாமல் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பாரவூர்தி ஒன்றின் பதிவு புத்தகத்தில் உள்ள நிறத்தை விடுத்து வேறு ஒரு நிறம் மாற்றி யமைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை ஒன்றின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கொடிகாமம் போக்குவரத்து பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த வாரம் கொடிகாமம் நகரப் பகுதியில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், பாரவூர்தி ஒன்றை மறித்து சோதனையிட்டனர். இதன் போது அந்த வாகனத்தில் உள்ள பதிவுப் புத்தகத்தில் வேறு ஒரு நிறமும் வாகனத்தில் இன்னொரு நிறமுமாக வேறுபட்டுக் காணப்பட்டுள்ளது. வாகனத்தின் நிறத்தை மாற்றிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டு வெள்ளிக்கிழமை மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார்.

இதன் போது அவர் அந்த வாகனத்தை வேறு ஒரு நபரிடம் இருந்து வாங்கினார் எனவும், இந்த விடயம் தற்போதே தனக்குத் தெரிய வந்துள்ளது எனவும் அவர் கூறினார்.

வாகனத்தைக் கொள்வனவு செய்யும் போது நிறத்தைப் பார்க்கக் கூடிய வகையில் தனது மனநிலை இருந்திருக்கவில்லை என்று சட்டத்தரணி மூலம் கூறினார். வழக்கை விசாரணை செய்த நீதிவான் முதல் தடவை என்ற வகையில் எச்சரிக்கை செய்து விடுவித்தார். (ஐ-9)


மணமக்கள் விபரம்

☎ 0114320017- 8
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

மணமகன் விபரம்

4295 | ப
1977 | நுவரேலியா | 165cm
Hotel Supervisor | இலங்கை
மகம் (சிம்மம்) | கிறிஸ்தவம்

6324 | ப
1987 | தெல்லிப்பளை | 165 cm
Development Officer | இலங்கை
கேட்டை (விருச்சிகம்) | கி.பா: 28

6906 | வே
1988 | சண்டிலிப்பாய் | 170 cm
Software Engineer | இலங்கை
உத்தராடம் (மகரம்) | கி.பா: 32

6263 | கோ
1978 | தெல்லிப்பளை | 170 cm
Teacher | இலங்கை
அத்தம் (கன்னி) | கி.பா: 30 | செவ்: 2

7367 | வே
1987 | கொக்குவில் | 176 cm
Bank Officer | இலங்கை
ஆய்யிலியம் (கடகம்) | கி.பா: 6

மணமகள் விபரம்

4322 | ந
1982 | பருத்தித்துறை | 165 cm
Doctor | இலங்கை
சுவாதி (துலாம்) | கி.பா: 31

3856 | ப
1982 | பண்டத்தரிப்பு | 167 cm
Teacher | இலங்கை
சுவாதி (துலாம்) | கிறிஸ்தவம்

5403 | வே + கு
1982 | தெல்லிப்பளை | 160 cm
Bank Officer | இலங்கை | செவ்: 7
கேட்டை (விருச்சிகம்) | கி.பா: 63

5842 | ப
1981 | அல்வாய் | 148 cm
இலங்கை
அத்தம் (கன்னி) | கி.பா: 54

7410 | வே
1989 | சுண்டிக்குளி | 167 cm
Bank Admin Officer | இலங்கை
ரோஹினி (ரிஷபம்) | கி.பா: 28 | செவ்: 7

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com | 077 716 45 24
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நல்லாட்சி அரசின் விசாரணைகள் விழலுக்கு இறைத்த நீரா?

'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதை' - என்று ஒரு பேச்சு வழக்கு நம் மத்தியில் உண்டு.

'மலையைக் கெல்லி எலியைக் கூட பிடிக்க முடியாமல் போய் விடுமோ...! - என்ற நிலையில் தென்படுகிறது நல்லாட்சி அரசின் நிதிக் குற்றவியல் பொலிஸ் பிரிவின் புலன் விசாரணைகள்.

2015 ஜனவரியில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்றமையை அடுத்து, இந்தப் பிரிவு உருவாக்கப்பட்டது.

முன்னைய ஆட்சித் தலைமையின் கீழ் தனி நபர்களாலும் குழுக்களாலும் சுருட்டப்பட்டவை எனக் கூறப்படும் பல்லாயிரம் கோடி ரூபாவைத் தேடிக் கண்டுபிடிப்பதும், அதை மீட்டெடுப்பதும், தவறிழைத்தோரைச் சட்டத்தின் முன் நிறுத்துவதும் இந்த விசாரணைப் பிரிவின் நோக்கமாக இருந்தது. இந்த இலக்குகளுக்காகவே அது அமைக்கப்படுவதாகவும் நல்லாட்சி அரசு அறிவித்தது.

கடந்த இரண்டு வருடங்களில் மலையைக் கெல்லுவது போல, பழைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் பல மோசமான நிதிக்குற்றங்களை அந்த அமைப்புத் துருவித் துருவி தேடி, புலனாய்வு செய்து விட்டது. பல நாடுகளுக்கும் பல அதிகாரிகளையும் அனுப்பித் தோண்டித் தோண்டிப் பார்த்தாகி விட்டது.

ஆனால், மலையைக் கெல்லிய மாதிரித் தோண்டிப் பார்த்தும் இன்னும் சுண்டெலிகூட கிடைக்காத கதையாகத்தான் இருக்கின்றது, நிதி புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைப் போக்கு.

இந்த இரண்டு வருட காலத் தேடுதலின் அடிப்படையில் சுமார் இருநூறு வழக்குகள் வரை அந்தப் பிரிவு நீதிமன்றத்துக்குக் கொண்டு போய்விட்டது. ஆனால், ஒரு வழக்கில் கூட குறிப்பிடக்கூடிய அளவுக்கு விடயங்கள் முன்நகர்ந்தவையாகத் தெரியவில்லை.

எல்லா வழக்குகளிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது, சந்தேக நபர்களைக் கைது செய்தோம், விளக்கமறியலில் வைத்தோம், பிணையில் விடுவித்தோம் அல்லது விளக்கமறியலில் தொடர்ந்து வைத்துள்ளோம் என்ற கதைதான் தொடர்கின்றதே தவிர, எந்த வழக்கும் ஆக்கபூர்வமான திசையில் முன்னேறி இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் பல தரப்புக்களாலும் சுருட்டப்பட்ட பணம், வெளிநாடுகளில் கொண்டு போய் அமுக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகின்றது.

அவை குறித்து ஓர் இழைத் தகவல் கூட கிடைக்காமல் தடுமாறுகின்றனர் நிதிக் குற்றவியல் விசாரணைப் பொலிஸ் பிரிவினர் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

உக்ரைன், அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சிங்கப்பூர், ஹொங்கொங், சீனா, ஐக்கிய அரபு எமிரேஸ்ட், நியூஸிலாந்து, மொரிஸியஸ் மற்றும் ஜமெய்கா, பனாமா போன்ற கரீபியன் தீவு நாடுகள் என சுமார் எழுபது நாடுகளுக்கு நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கடிதம் எழுதியுள்ளனராம். இலங்கையில் இருந்து பொருந் தொகைப் பணத்தை அந்த நாடுகளுக்குக் கொண்டு சென்று முடக்கியவர்களின் விவரங்களைத் தருமாறு எழுதப்பட்ட இக் கடிதங்கள் தொடர்பில் ஆகப் பத்து நாடுகள் மட்டுமே, அப்படி ஒரு கடிதம் தங்களுக்குக் கிடைத்தது என்று பதில் அனுப்பினவாம், மற்றைய நாடுகள் அத்தகைய ஒரு கோரிக்கைக் கடிதம் தங்களுக்கு வந்து சேர்ந்தமையை உறுதிப்படுத்தி ஒரு வரியிலாவது பதில் தரவில்லை என நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் விசனம் தெரிவித்தனர்.


பதிலளித்த நாடுகள் கூடத் தத்தமது நாட்டு நீதிமன்றங்களில் இதற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, அந்தந்த நீதிமன்றங்கள் உத்தரவிட்டாலே ஒழிய தாங்களாக விடயங்களைத் தந்துதவ முடியாது என்று கைவிரித்து விட்டன.

அதனால் அந்தந்த நாடுகளில் போய், நீதிமன்றத்தில் மனுச் செய்து அந்தந்த நீதிமன்றங்களின் உத்தரவைப் பெற்றால் மட்டுமே, அது பற்றிய விவரங்கள் ஏதும் கிடைக்க வாய்ப்புக் கிட்டும் எனக் கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றன விசாரணைப் பிரிவு வட்டாரங்கள்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பெரும் தொகைப் பணத்தை சுருட்டிக் கொண்டு போய் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பதுக்கியவர் என்று கருதப்படும் ஒருவர் குறித்து, அந்த நாட்டுடன் இலங்கை விசாரணைப் பிரிவினர் தொடர்பு கொண்டனர். எல்லா விடயங்களையும் அரபு மொழியில் மொழிபெயர்த்துத் தந்தால் ஏதும் பதில் தரமுடியும் என்றால் தருவோம் எனப் பதில் வந்ததாம். இப்போது அந்தத் தனிநபர் அந்த நாட்டில் இருந்து இலங்கைக்கு முதலீடு செய்ய வருபவர் போல இலங்கைக்கு வந்திறங்கியுள்ளாராம். அதாவது, இலங்கையில் இருந்து சுருட்டிக் கொண்டு போன கறுப்புப் பணத்தைஅந்த நாட்டிலிருந்து கொண்டு வரும் முதலீடாக 'வெள்ளைப் பணமாக' இங்கு காட்டி, இங்கு சட்ட ரீதியாக முதலீடு செய்ய வந்திருக்கிறாராம் அவர். இதைத்தான் ரஜனிகாந்தின் 'சிவாஜி' படத்தில் கதையம்சமாகப் பார்த்தோம் என்றும் சில வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

பழைய ஆட்சிக் காலத்தில் நடந்த முறைகேடுகளை விசாரிக்கும் நடவடிக்கை இந்தச் சீத்துவம் என்றால், இப்போது நல்லாட்சி அரசின் கீழ் இடம்பெற்றது எனக் கூறப்படும் மத்திய வங்கி 'பிணைமுறி' முறைகேடு குறித்து விசாரிப்பதற்குத் தனியான ஜனாதிபதி விசாரணைக்குழு ஒன்றை நியமித்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அதுவும் மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கும் வேலையாக முடியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.!




## ஊழல் மோசடியில் ஈடுபட்டோரை உடனடியாகத் தண்டிக்க முடியாது

### மின்சக்தி அமைச்சர் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு

கொழும்பு, ஜன.30

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு புரட்சி செய்வதைப் போல் உடனடியாகத் தண்டனை வழங்க முடியாது என்று அரசு தெரிவித்துள்ளது.

ஊழல், மோசடியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தண்டனை வழங்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு இதுவரை எந்த ஒருவருக்கும்தண்டனைவழங்கவில்லை என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய பதில் அளித்த போதே இவ்வாறு கூறியுள்ளார்.

கண்டி அஸ்கிரிய மகாநாயக்கர் வராக்காகொட ஸ்ரீ ஞானசார தேரரை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நேற்று நேரில் சந்தித்து ஆசிபெற்றார்.

அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுள்ள சூரிய மின்சக்தி திட்டம் குறித்து அஸ்கிரிய மகாநாயக்க தேரருக்குத் தெளிவுபடுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அமைச்சர், ஊழல் மோசடியில் ஈடுபட்டோருக்குத் தண்டனை வழங்குவதாக அரசு வழங்கிய உறுதிமொழி குறித்துப் பதிலளித்தார்.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு இதுவரை தண்டனை வழங்காமைக்கு, ஜனாதிபதி அபேராமவில் ஆற்றிய உரையே சிறந்த பதிலாகும். அதில் அரச தலைவர் என்ற வகையில் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி தெளிவாகக் கூறியிருந்தார்.

ஒன்றை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். தவறிழைத்தவர்களைக் கண்டறிய், அவர்களுக்குதண்டனைவழங்க புரட்சி செய்வதை போன்று அரசால் செயற்பட முடியாது. நாட்டில் சட்டம் காணப்படுகின்றது. சர்வதேசம் இதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

தாம் தவறிழைக்கவில்லை என்று கூறுவோருக்கே அந்த சட்டத்தில் அதிக உரிமைகள் காணப்படுகின்றன. அதனை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். அதன் காரணமாகவே இந்த தாமதம் ஏற்படுகின்றது.

நுகேகொடையில் நடைபெற்ற மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தரப்பினரின் பொதுகூட்டம் தொடர்பிலும் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

எப்போதும் ஜனநாயக அரசு என்பது சவால் நிறைந்ததாகும். எதிர்க்கட்சிகள் எப்போதும் சவாலை விடுக்க வேண்டும். அது எதிர்க்கட்சியின் கடமை. எனினும் அதில் என்ன பெரிய பிரச்சினை உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் தானே நாம் ஆச்சரியப்பட வேண்டும். - என்றார். (எ)

## கால்நடைகளின் நலன்பேணும் குழுவை அமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன.30

கால்நடைகளின்நலன்பேணும் குழு ஒன்றை அமைக்க, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபாவின் கவனம் திரும்பியுள்ளது. இதுதொடர்பில், அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார். அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்தக் கூட்டம் தெருநாய்கள் குறித்த வேலைத் திட்டம் ஒன்றை திட்டமிடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மாகாண சபை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உள்ளடங்கலாக இந்தக் குழுவை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பொது மக்கள் மற்றும் கால்நடைகளின்நலன்பேணும் அமைப்புக்களின் கருத்துக்களைப் பெற்று, அந்த குழுவுக்கான பொறுப்புக்கள் பகிந்தளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர், நாடு முழுவதும் பாடசாலை, வைத்தியசாலை, பஸ் தரிப்பிடங்கள் மற்றும் பொது இடங்களுக்கு அருகில் நடமாடும் தெருநாய்களால் பொதுமக்கள் அன்றாடம் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். தினமும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்தவாறு உள்ளன.

இந்த முறைப்பாடுகளுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவே இந்தக் குழு அமைக்கப்படுகின்றது. நாய்களை தெருக்களில் கொண்டு வந்து விடுகின்றவர்களுக்கு சீசீடி வி கமராக்களின் உதவியோடு கடும் சட்ட நடவடிக்கைகளை எடுக்க பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்படவுள்ளது.

கால்நடைகளின் நலன் பேணும் குழுவுக்கான ஆலோசனைகளை வழங்குமாறும், கால்நடைகளின்நலன்பேணும் அமைப்புக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். (எ)

### கொடிய டெங்கு நோயை இல்லாது அழிப்போம்

குடி நீர்த் தேவைக்காகவோ அல்லது வேறு தேவைக்காகவோ நீரை சேமித்து வைக்கும் பாத்திரங்கள், தாங்கிகளை (வயமே) நுளம்புகள் முட்டை இடா வண்ணம் மூடி வைத்திருப்போம். கிழமைக்கு ஒரு தடவை அவற்றின் உட்புறத்தை நன்றாக தேய்த்துக் கழுவி, ஒட்டியுள்ள நுளம்பு முட்டைகளை அகற்றிடுவோம்.

### நாளை

31.01.2017
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : பூரட்டாதி மு.இ 11.25 வரை
திதி : சதுர்த்தி பி.இ 4.17 வரை
சுபநேரம் : 11.06 - 12.36
இராகுகாலம் : 3.36 - 5.06

# வடக்கின் நீர்வள நெருக்கடிகளுக்கு சரியான தீர்வைக் கண்டறியவேண்டும்

## வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஜன.30

உலகம் எதிர்நோக்கும் நீர் தொடர்பான நெருக்கடிகளுக்கு எமது வடக்கு மாகாணமும் விலக்காகவில்லை என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்,

போருக்குப் பின்னர் அதிகரித்துள்ள கட்டுமானச் செயற்பாடுகள், போரினால் எமது நீர்த் தேக்கங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாக எமது நீர்வளமும் பல்வேறு வகையான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்றும் கூறினார்.

வடமாகாண நீர்வள அபிவிருத்தி தொடர்பான மூன்று நாள் ஆய்வரங்கு சனிக்கிழமை யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகியது. வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த ஆய்வரங்கின் தொடக்க நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தண்ணீர் இயல்பாகவே தீயை அணைக்கக் கூடியதே அல்லாமல் தீயை மூட்டிவிடக் கூடியது அல்ல. ஆனால், தண்ணீர் இனிமேல் சமூகங்களுக்கிடையிலும் நாடுகளுக்கிடையிலும் பகைமையை மூட்டி விடும் எரி எண்ணெயாக இருக்கப்போகிறது. அடுத்த உலகப் போருக்கான காரணியாக அமையப்போகிறது என்ற அச்சம் சர்வதேச அளவில் தொற்றிக் கொண்டுள்ளது.



அந்த அளவுக்கு உலகில் நீருக்கான நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. சனத்தொகை அதிகரிப்பால் நீருக்கான தேவை அதிகரித்து வருவதோடு கிடைக்கின்ற நீரும் பயன்படுத்த முடியாத அளவுக்குத் தரம் தாழ்ந்து வருகிறது.

எமது பிரதேசத்திலும், சனத்தொகை அதிகரிப்பு, விவசாயத் தேவைகள், போருக்குப் பின்னான காலத்தில் அதிகரித்துள்ள கட்டுமானச் செயற்பாடுகள், கைத்தொழில் வளர்ச்சி, போரினால் எமது நீர்த் தேக்கங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், மயோசின் சுண்ணாம்புப் பாறையில் உள்ள பலவீனங்கள், கடல்நீரின் ஊடுருவல், அன்றாடம் குவிந்துவரும் மாசுகள், பூகோள வெப்பமயமாதலால் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்கள் என்று எமது நீர் வளமும் பல்வேறு வகையான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எமது நீர்வளம் எதிர் நோக்கியுள்ள நெருக்கடிகளுக்குச் சரியான தீர்வுகளைக் கண்டறியாமற் போனால் நாமும் எமது சூழலும் பெரும் பாதிப்புகளைச் சந்திக்க நேரும்.

இதனைக் கருத்திற் கொண்டே வடக்கு மாகாணத்தின் நீர் வளங்களை நிலைத்து நிற்கும் வகையில் மீட்டெடுப்பதற்கான, பாதுகாப்பதற்கான, பங்கிடுவதற்கான, முகாமை செய்வதற்கான ஒரு நீரியல் கொள்கையை உருவாக்கும் முயற்சிக்காக இந்த நீர்வள அபிவிருத்தி ஆய்வரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.- என்றார். (ம)



ஆனைக்கோட்டை சாவற்காடு கெங்காதேவி அம்மன் ஆலய புனருத்தாபன அடிக்கல் நடும் விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்றது. அடிக்கல்லை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நட்டு வைத்தார். (இ-40)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.30

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியில் மாலை 5.30 மணிவரை கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் இருந்து குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் மின்சாரம் தடைப்படும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

அதன்படி, கிளிநொச்சிப் பிரதேசத்தில் நாச்சிக்குடா, நாகபடுவான், முழங்காவில், குமுழமுனை, பல்லவராயன்கட்டு, வெள்ளாங்குளம், எஸ்.எல்.எல்.ஐ கணேசபுரம் வெள்ளாங்குளம், 651ஆவது படைப்பிரிவுமுகாம், 652ஆவது படைப்பிரிவுமுகாம், 2ஆவது அதிரடிப்படை முகாம், நாச்சிக்குடா கடற்படைமுகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்-

வவுனியா பிரதேசத்தில் வெளிக்குளத்தில் இருந்து குடாகச்சக்கொடிய வரை, கோவில்குளத்தில் இருந்து சிதம்பரபுரம் வரை, ரி.எம்.எம் கல்லுடைக்கும் ஆகிய இடங்களிலும் -

மன்னார் பிரதேசத்தில் முருங்கனில் இருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கிரி ஐஸ் தொழிற்சாலை மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை மன்னார் வைத்தியசாலை விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம் கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத்துறைமுகம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## மகாத்மா காந்தியின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.30

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தி அடிகளாரின் 69 ஆவது நினைவு தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலை முன்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுகள் அகல இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளருமான ந.சிவகரன் தலைமையில் காந்தி சேவா சங்கத்தின் பொதுச்செயலாளர் ஷாந்தன் சத்திய கீர்த்தியின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. (ஐ-21)



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் இராணுவத்தினர் வசம் இருந்த, 5.5 ஏக்கர்காணி, கடந்த 27ஆம் திகதி அவற்றின் சட்டரீதியான சொந்தக்காரர்களுக்குக் கையளிக்கப்பட்டது.

552ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் அடீப திலகரத்ன, கிளிநொச்சி பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலனிடம் அதற்கான பத்திரத்தைக் கையளித்தார். பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர் எஸ். அனுசியா, பச்சிலைப்பள்ளி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரஞ்சித் பண்டார மற்றும் அரச அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## நாளை கொடியேற்றம்

சுன்னாகம், ஜன.30

சுன்னாகம் - மயிலணி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் (வடலியம்மன்) ஆலய மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ச)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்து; இளைஞன் காயம்!

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்த அந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் புத்தூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது. கரணவாய் தெற்கு கரவெட்டி பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் ரஞ்ஜித் (வயது-29) என்ற இளைஞனே காயங்களுக்கு உள்ளானவராவார்.

வீதியின் இடதுபுறம் திரும்புவதற்கு சமிக்ஞை போடப்பட்டு நிறுத்தியிருந்த ஓட்டோ மீது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் கூறினர். இதேவேளை பத்தமேனி பகுதியைச் சேர்ந்த அந்த ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் கூறினர். (ஐ-9)

# குழிதோண்டிய இடத்தில் கைக்குண்டு மீட்பு!

உரும்பிராய், ஜன.30

உரும்பிராய் இராச வீதிப் பகுதியில் உள்ள வீதியோரம் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மின் கம்பம் நடுவதற்கு மின்சார சபை ஊழியர்கள் குழி ஒன்றைத் தோண்டிக் கொண்டிருந்த போது கைக்குண்டு தென்பட்டுள்ளது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய குண்டை எடுத்துச் சென்றனர். (ஐ-9)

# ஆழ்கடல் மீன் பிடித்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## வாழைச்சேனையில் கடற்றொழில் அமைச்சர் அமரவீர




வாழைச்சேனை,ஜன.30

கிழக்கு மாகாணத்தில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக மீன்பிடி உள்ளது. பாரம்பரிய முறைகளைக் கைவிட்டு, நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய முறையில் ஆழ்கடல் மீன்பிடியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இதற்கு மீனவர்கள் முன்வர வேண்டும்.

-இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஆழ்கடல் கடற்றொழில் அலகு திறப்பு விழாவும், மீனவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வும் வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐரோப்பிய யூனியனால் சர்வதேச கடல் பரப்புக்குச் சென்று மீன் பிடிப்பதற்கான தடை நீக்கப்பட்ட பின்னரும், வாழைச்சேனை பிரதேச மீனவர்கள் இன்னும் சர்வதேச கடல் பரப்புக்குச் சென்று மீன் பிடிப்பதற்கு ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.

கடந்த காலங்களில் கடற்றொழில் அமைச்சால் 55 அடிக்கு மேலுள்ள படகுகளை அறிமுகம் செய்து, ஐம்பது சத வீதமான படகுகளை மானிய அடிப்படையில் வழங்கினோம். சர்வதேச கடலிலே சென்று அதிக மீன்களைப் பிடிக்கவும் ஏற்பாடுகளைச் செய்தோம். அறிவித்தல் கொடுத்தோம். ஆனால், இப்பிரதேசத்தில் இருந்து இதற்கு யாரும் விண்ணப்பிக்கவில்லை.

மீன்பிடித்துறையை முன்னேற்றம் செய்வதால் நாட்டின் வருமானத்தை முன்னேற்றக் கூடிய வழிவகைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் தான் அரசு அதிகமான நிதியை கடற்றொழில் அமைச்சுக்கு வழங்கி உள்ளது. நாட்டை முன்னேற்ற வேண்டுமென்றால், மீன்பிடித் தொழிலை முன்னேற்றம் செய்ய வேண்டும்.

மீனவர்களால் கோரப்பட்ட விடயங்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எனது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். விரைவில் இந்தப் பிரதேசத்துக்கு வருகை தந்து பாசிக்குடா பகுதியில் அமைக்கப்படவுள்ள மீனவர் தங்குமிட கட்டடத்தைத் திறந்து வைப்பேன். இப்பிரதேசத்தில் இருக்கும் மீனவக் குடும்பங்களுக்கு வீடமைப்பு மற்றும் மலசலகூடத் திட்டங்களை எதிர்காலத்தில் செய்து தரப்படும். - என்றார். (ச)

# கடற்கரையில் சடலம் மீட்பு!

காத்தான்குடி,ஜன.30


காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுவோடை கடற்கரையில் கரை ஒதுங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக் கிழமை மீட்கப்பட்டது.

அடையாளம் காணப்படாத இந்த சடலம் சுமார் 60 வயது மதிக்கத் தக்க ஒருவருடையதாக இருக்கலாம் என மீனவர்கள் தெரிவித்தனர்.

வழமை போன்று கடலுக்குச் சென்ற மீனவர்கள் நடுவோடைக் கடற்கரைப் பகுதியில் சடலம் ஒன்று கரை ஒதுங்கி இருப்பதைக் கண்டு காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர். இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திருக்கோவிலில் நேற்று ஆர்ப்பாட்டம்!



திருக்கோவில்,ஜன.30

அம்பாறை திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தீர்வு பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்தி நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 'அரசே எங்களது பிள்ளைகளை உடனே விடுதலை செய்', 'ஐ. நா சபையின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து எமது உறவுகளை விடுதலை செய்', 'இலங்கை அரசே எமது கோரிக்கைகளை நிறைவேற்றித்தா' போன்ற சுலோகங்களுடன் கூடிய பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டோர் தெரிவிக்கையில்; இந்த நாட்டில் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்கள் உயிருடன் இருந்தால், விடுதலை செய்யப்பட வேண்டும். இதேவேளை, எமது உறவுகளை காணாமல் ஆக்கியவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இந்தப் போராட்டத்தை அரசு கவனத்திற் கொள்ளாவிடின், சாகும்வரையான உண்ணாவிரதத்தை நாம் முன்னெடுப்போம்.-என்றனர்.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனிடம் கையளிக்குமாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். (ச)

# மட்டக்களப்பு கடற்கரைகளில் ஆற்றுவாழைத் தாவரங்கள்

## மீனவர்கள் பாதிப்பு



மட்டக்களப்பு,ஜன.30

கடந்த ஒரு சில நாள்களாகப் பெய்து வந்த அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மட்டக்களப்பிலுள்ள கடற்கரையோரங்களில் ஆற்றுவாழை எனும் தாவரங்கள் கரை ஒதுங்கியுள்ளன.இதனால் மீன்பிடியில் சிரமம் ஏற்பட்டுள்ளது என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, கல்லடி மற்றும் டச்பார், காத்தான்குடி, ஏறாவூர், களுவன்கேணி, களுவாஞ்சிக்குடி போன்ற கடற்கரையோரங்களில் இந்தத் தாவரங்கள் கரை ஒதுங்கியுள்ளன.

இது ஓர் இயற்கையான நிகழ்வு. எனினும் இந்த முறை பருவமழை பொய்த்துப் போனதால் அளவுக்கதிகமான ஆற்றுவாழைத் தாவரங்களும், ஜெலி மீன்கள் (சொறி முட்டைகள்) எனும் உவர் நீர் உயிரிகளும் வாவியில் உற்பத்தியாகி வெள்ளத்தோடு பெருமளவில் கடலில் கலந்துள்ளன. இதனால் வலைகளில் சொறிமுட்டைகள் சிக்கிக் கொள்வதால் மீன்பிடியிலும் தடங்கல் ஏற்பட்டுள்ளது என மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும், மிக அதிகளவில் இந்தத் தாவரங்கள் கடற்கரையை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதால் கடற்கரையோரங்களில் படகுகள் மற்றும் தோணிகளை நிறுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என மீனவர்கள் மேலும் தெரிவித்தனர். (ச)

# வெள்ளத்தால் 800 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

அக்கரைப்பற்று,ஜன.30

அக்கரைப்பற்றுப் பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவில் 800 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரீ.மயூரன் தெரிவித்தார்.

தொடர்ச்சியாகப் பெய்த அடை மழையால் அக்கரைப்பற்று நீத்தை நீர்ப்பாசனக் குளம் உடைப்பெடுத்தது. இதனால் நெல் வயல்களில் தேங்கிய வெள்ள நீர் சின்ன முகத்துவாரம் மற்றும் கோணாவத்தை முகத்துவாரம் ஊடாக வெளியேற்றப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு முதியவர் சாவு!

கல்முனை கிட்டங்கி பாலத்தில், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட முதியவர், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பாறை - உஹன பிரதேசத்தைச் சேர்ந்த டபிள்யூ.பியசிறி (வயது - 73) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

கடந்த வெள்ளிக்கிழமை கல்முனையிலிருந்து மோட்டார் சைக்கிளில் உஹனை நோக்கிச் சென்று கொண்டிருந்த பிரஸ்தாப நபர், கிட்டங்கி பாலத்தடியில் மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கி அதனைத் தள்ளிக் கொண்டு சென்றபோது, கால் தடுக்கி வழுக்கி விழுந்துள்ளார். இதனை அடுத்து வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டாரென்று தெரிவிக்கப்பட்டது.

# நற்பிட்டிமுனையிலும் சடலம்!

நற்பிட்டிமுனை,ஜன.30

கல்முனை நற்பிட்டிமுனைக் கிராமத்தில் 30 வயதுடைய ஆணொருவரின் சடலம், உறவினர் ஒருவரின் வீட்டுக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மீட்கப்பட்டது.

நற்பிட்டிமுனை கிட்டங்கி வீதியைச் சேர்ந்த பொன்னுத்துரை தர்மேந்திரா (வயது-30) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பகல் தனது 30ஆவது பிறந்த நாள் கொண்டாட்டத்தில் அவர் ஈடுபட்டிருந்தார் என குடும்பத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகளைக் கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# குளவி கொட்டிய இருவர் கந்தளாய் ஆஸ்பத்திரியில்

திருகோணமலை,ஜன.30

திருகோணமலை கந்தளாய் பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகி 48, 54 வயதுகளையுடைய இருவர் கந்தளாய் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

வழமை போன்று இவர்கள் இருவரும் மீன்பிடித் தொழிலுக்காக நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை கந்தளாய் குளத்துக்குச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். இதன்போது, மரம் ஒன்றிலிருந்த குளவிகள் கலைந்து வந்து இவர்கள் இருவரையும் கொட்டியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இந்திய சாரதிகளை அழையுங்கள்!

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை



கொழும்பு, ஜன.30

இந்தியாவிலிருந்து சாரதிகள் அழைத்து வரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேவர்தன தெரிவிக்கையில்:

''இலங்கையில் பஸ் சாரதிகளுக்குப் பற்றாக்குறை காணப்படுகின்றது. பஸ் சாரதி பற்றாக்குறைக்குத் தீர்வாக இந்தியச் சாரதிகள் இலங்கையில் கடமையாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

''இது தொடர்பிலான யோசனைத் திட்டம் ஒன்று விரைவில் அரசிடம் சமர்ப்பிக்கப்படும்.

''சாரதிகள் இல்லாத காரணத்தால் சில இடங்களில் - வீடுகளில் பஸ்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.''-என்றார். (எ)

# மஹிந்தவால் ஆட்சி கவிழுமா? மரணிக்கத் தயாராக இருங்கள்!

## கனவு காண்கிறது கூட்டு எதிரணி என்கிறார் பொன்சேகா



கொழும்பு, ஜன.30

மரணிப்பதற்கும், தப்பித்துக்கொள்வதற்கும் உங்களைத் தயாராக்கிக் கொள்ளுங்கள் என்று முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான பொன்சேகா தெரிவித்தார்.

மஹிந்த நினைக்கும் ஆட்சியைக் கவிழ்ப்பது தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களின் கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''மஹிந்தவின் ஆட்சிக் கவிழ்ப்பு என்பது பகல் கனவு. எந்தவகையிலும் அதற்கு இடம் கொடுக்கப்பட மாட்டாது. போலித் திட்டங்களால் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது.

''2020ஆம் ஆண்டு கூட்டு எதிர்க்கட்சி தலைமையில் புது ஆட்சி அமைக்கப்படும் என்று கூறியுள்ளார்கள்.

''அவ்வாறு ஆட்சி அமைக்கப்படும் என்றால், நீங்கள் அனைவரும் மீண்டும் தாக்குதலை மேற்கொள்ளத் தயாராக இருங்கள். மரணிக்கவும் தயாராக இருந்து கொள்ளுங்கள்.

''மீண்டும் வெள்ளை வான் கலாசாரம் வந்து சேரும். அவற்றில் இருந்து தப்பிக்கொள்ள இடங்களையும் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். ரவுடிகளின் அராஜகங்களுக்கும், அச்சங்களுக்கும் மத்தியில் வாழவும் தயாராகுங்கள்.

''இவ்வாறான பயங்கரங்களைச் சந்திக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்களா? அல்லது அவற்றுக்கு எதிராக ஒன்று திரள வேண்டுமா என்பதனை மக்களே இப்போது முடிவு செய்யவேண்டும்.

''அதேபோல் கோட்டாபய மீண்டும் அரசியலுக்கு வரத் திட்டமிடுகின்றார். அவரை வரவேற்கின்றேன். ஆனால், அவர் தோல்வியைச் சந்திப்பார்.

''அப்படி வருபவர் தனக்கு கீழ் குழுக்களை அமைத்துக் கொள்வார். தான்தோன்றித்தனமாகச் செயற்படுவார்.''- என்றார். (எ)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுராதபுரம் ஸ்ரீமகா போதி புனித பூமியில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்டார். அனுராதபுர மாவட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பிரதமருடன் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# பிணைமுறி விற்பனையால் இலங்கைக்கு நஷ்டமில்லை

## உலக வங்கி கருத்து

The World Bank

கொழும்பு, ஜன.30

மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல்களில் அரசுக்கு நஷ்டம் ஏற்படவில்லை என்று உலக வங்கி கருத்து வெளியிட்டுள்ளது.

அண்மையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உலக வங்கி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி பிணைமுறி பரிமாற்றம் தொடர்பான அனைத்து விவரங்களையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உலக வங்கிக்குச் சமர்ப்பித் துள்ளார்.

இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பிரதமர் உலக வங்கியின் அபிப்பிராயத்தைக் கோரியிருந்தார்.

இதன்போது மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல்களால் அரசின் மத்திய வங்கி நஷ்டம் அடையவில்லை என்று உலக வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

கடனைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் வரி மறுசீரமைப்பு முன்மொழிவுகளையும் உலக வங்கி பாராட்டியுள்ளது.

எனினும், மத்திய வங்கியின் திறைசேரி முறிகள் விற்பனையில் மோசடி இடம்பெற்றுள்ளதாக கோப் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அரசதரப்பும் எதிர்த்தரப்பும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் உலக வங்கி, தனது கருத்தை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, மத்திய வங்கி திறைசேரி முறிகள் விவகாரம் குறித்து விசாரணை செய்வதற்காக மூவரடங்கிய ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வெள்ளிக்கிழமை நியமித்திருந்தார்.

அந்த விசாரணைக்குழு, மூன்று மாதங்களுக்குள் தனது விசாரணைகளை நிறைவு செய்யும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ)

# கலாசாரத்துக்கு முரண்பாடான சட்டங்களை சுதந்திரக் கட்சி ஒருபோதும் கொண்டுவராது

## பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே கூறுகிறார்

கொழும்பு, ஜன.30

நாட்டின் கலாசாரத்துக்கு முரண்பாடான சட்டங்களை சுதந்திரக் கட்சி எப்போதும் கொண்டுவராது என்று பொது நிர்வாக மற்றும் முகாத்துவ பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்துள்ளார்.

ஓரினச் சேர்க்கையாளர் சட்ட மூலத்தை ஐக்கிய தேசியக் கட்சியே கொண்டு வந்தது.

அப்படியான சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இடமளிக்க முடியாது என்று திருகோணமலை பஸ் சங்கத்தின் 30 ஆவது ஆண்டு நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போதே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றத்துக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. எனக்குத் தெரிந்த வகையில் அமைச்சரவைக்குத்தான் கொண்டு வரப்பட்டது, இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்படும் போது நான் அங்கு இருக்கவில்லை.

மேலும், அமைச்சரவையில் வைத்தே ஜனாதிபதி அதனை நிராகாரித்து விட்டார் என்று எனக்குத் தெரியவந்தது.

எனக்குத் தெரிந்தவகையில் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர் ஒருவரே அதனைக் கொண்டு வந்தார்.- என்றார். (எ)

# இனவாதக் கருத்துகளைப் பரப்பும் சமூக ஊடகங்கள் மீது நடவடிக்கை

கொழும்பு, ஜன.30

சமூக ஊடகங்களின் ஊடாக இனவாதத்தைத் தூண்டும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஊடக ஆணைக் குழு ஒன்றை நிறுவ அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பாக அரச தகவல் திணைக்கள பணிப் பாளர் ரங்க கலன்சூரிய தெரிவித்தவை வருமாறு:

சமூக ஊடகங்கள் வாயிலாக மதவாதம், இன வாதத்தைத் தூண்டும் வகையில் பிரசாரங்கள் இடம்பெறுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த முறையான திட்டங்கள் எமது நாட்டில் இல்லை.

இது தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்ள ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக மற்றும் பிரதியமைச்சர் கருணாரட்ண பரணவிதான உள்ளிட்ட ஊடகப் பிரதானிகளுடன் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட உள்ளது. -என்றார். (எ)

# நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி; எச்சரிக்கின்றனர் நிபுணர்கள்!

கொழும்பு, ஜன.30

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பொருளியல் நிபுணர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு;

பெரிய கடன் பொறியில் சிக்கியுள்ளமை, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, அந்நியச் செலாவணி கையிருப்பு வீழ்ச்சி, வெளிநாட்டு முதலீடுகள் எதிர்பார்த்தளவு கிடைக்காமை போன்ற காரணிகளால் நாட்டின் பொருளாதாரம் பெரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

வெளிநாட்டவர்கள் பிணைமுறிகளில் முதலீடு செய்திருந்த 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை மீளப் பெற்றுக் கொண்டுள்ளனர். மேலும், இலங்கைக்கு வரும் முதலீட்டாளர்கள் குறைந்த ஆண்டாகக் கடந்த ஆண்டு கருதப்படுகின்றது.

இந்தநிலையில், பங்குச் சந்தை பெரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது, உள் நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

பொருளாதார வீழ்ச்சியடைந்த நாடுகளின் வரிசையில் கிரேக்கத்தை விடவும் 12 நாடுகள் பின்னணியில் இலங்கை காணப்படுகின்றது.

இதேவேளை, வெளிநாடுகளுக்கு இலங்கை செலுத்த வேண்டிய கடன் தொகைகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துச் செல்கின்றது.- என்றனர். (எ)

# முல்லை. கடலில் இந்திய றோலர்கள்; கடற்படைக்கு தகவல் வழங்கப்பட்டது

## அரச அதிபர் தெரிவிப்பு



முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய றோலர்களின் மீன்பிடி தொடர்பாகக் கடற்படைக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவரால் இந்த விடயம் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சமாசத் தலைவர் தெரிவித்த தகவலின் அடிப்படையில் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக் கடலில் இந்திய றோலர்களின் அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக கடற்றொழிலாளர்களால் பல்வேறு வழியிலான போராட்டங்கள், பேச்சுகள் நடத்திய நிலையில் ஓய்ந்திருந்த இந்திய றோலர்களின் அத்துமீறிய மீன்பிடி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இந்த நிலையில் இதனைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.-என்றார். (ஐ-70)

# முள்ளியவளையில் 3 மாணவருக்கு உதவியாக கற்றல் உபகரணங்கள்



முல்லைத்தீவு, ஜன.30

முல்லைத்தீவு - முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தில் தாயை இழந்து கஷ்ட நிலையில் உள்ள ஒரு குடும்பத்தில் இருந்த மூன்று மாணவர்களுக்கு நேற்று முன்தினம் முல்லைத்தீவு அமைப்பினால் கல்விக்கான உதவிகள் வழங்கப்பட்டன.


மூன்று மாணவர்களுக்கும் பொதுவாக ஒரு துவிச்சக்கர வண்டியும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. மேற்படி அமைப்பின் பிரதிநிதிகளுடன் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மாணவர்களின் வீட்டுக்குச் சென்று அந்தப் பொருள்களைக் கையளித்தார்.

அத்துடன் மேற்படி மாணவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்ட வீட்டை கட்டுவதில் அவர்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகள் தொடர்பாகவும் பொலிஸ் அத்தியட்சகர் கேட்டறிந்தார் எனக் கூறப்படுகின்றது.

'நாளை முல்லைத்தீவு' அமைப்பின் இணைப்பாளரான லண்டனில் வசிக்கும் பு.சுரேஸ் தனது மகனின் பிறந்தநாளை முன்னிட்டு மேற்படி உதவிகளை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

## உள்ளூராட்சி மன்றத்தில்

# பெண்களின் வகிபாகத்தை அதிகரிக்கக் கையெழுத்து!



வவுனியா, ஜன.30

உள்ளூராட்சி மன்றத்தில் பெண்களின் வகிபாகத்தை அதிகரிக்கும் நோக்கோடு வவுனியா நகர மத்தியில் கையெழுத்து வேட்டையொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

2016 இல் மாகாண உள்ளூராட்சி சபை தேர்தல் (திருத்தச்சட்டம்) சட்டத்தைத் தொடர்ந்து பெண்களுக்கு கிடைக்கப்பெற்ற அரசியல் உரிமையை மேம்படுத்தும் நோக்கோடு நடத்தப்பட்ட இந்தக் கையெழுத்துப் பெறும் நிகழ்வில் அதிகமானோர் கலந்து கொண்டு கையொப்பமிட்டிருந்தனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கையெழுத்து வேட்டை அன்று மாலை வவுனியா வடக்கு நெடுங்கேணியிலும் இடம்பெற்றது. (ஐ-100)

# சிறாட்டிகுளத்தில் யானைத் தொல்லை மக்கள் அச்சம்!

முல்லைத்தீவு,ஜன.30

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிறாட்டிகுளம் கிராமத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது என்றும் இதனால் தாங்கள் பல்வேறு சிரமங்களையும் உயிர் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளவேண்டியுள்ள தாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

மாலை 6 மணியானதும் பயிர்ச் செய்கை பகுதிகளிலும் குடிமனைக்குள்ளும் புகும் யானைகள், பெருமளவான பயிர் செய்கைகளையும் பயன் தரு மரங்களையும் அழித்து வருகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, இரவு வேளைகளில் விழித்திருந்து காவல் காக்க வேண்டிய நிலை காணப்படுகிறது என்றும் உயிர் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-81)

# போக்குவரத்து வசதியை ஏற்படுத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி பாரதிபுரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம், பொன்நகர் ஆகிய கிராமங்களுக்குப் போக்குவரத்து பஸ் சேவை ஒன்றை நடத்துமாறு அந்தக் கிராமங்களின் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரில் இருந்து இறுதித் தூரம் பதினைந்து கிலோ மீற்றராக உள்ள நிலையில் கிளிநொச்சி நகரத்துக்கு இந்தக் கிராம மக்கள் நாள்தோறும் வருகை தருகின்றமையில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாகக் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு நோயாளர்கள் வருவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் என்பனவற்றுக்கு வருகை தருவதிலும் நெருக்கடிகளை இந்தக் கிராம மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

இந்தக் கிராமங்களுக்குச் செல்லும் அரசியல்வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் தங்களுடைய கிராமத்துக்கு பஸ் சேவையை ஏற்படுத்தித் தாருங்கள் எனக் கோரிக்கையை இந்தக் கிராம மக்கள் விடுத்து வருகின்றனர்.

ஆனால், பஸ் சேவைகள் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-70)

# புதுக்குடியிருப்புச் சந்தியில் பஸ் தரிப்பிடம் இல்லை!

## ஒட்டுசுட்டான், வவுனியா பயணிகள் சிரமம்

புதுக்குடியிருப்பு, ஜன.30

புதுக்குடியிருப்புச் சந்தியில் பஸ் தரிப்பிடம் இல்லாததால், பயணிகள் நீண்ட நேரம் வெயிலில் காய்ந்தும் மழை என்றால் நனைந்தும் அவலப்படுகின்றனர்.

ஒட்டுசுட்டான் வழியாக வவுனியா செல்லும் பயணிகள் இதுகுறித்து 'காலைக்கதிர்' செய்தியாளரிடம் தங்களுக்கு ஏற்படும் சிரமங்கள் தொடர்பில் கூறியுள்ளனர்.

இது விடயம் தொடர்பில் வடமாகாண போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் கவனம் எடுத்து பயணிகளுக்கு உதவ வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போக்குவரத்துச் சபை மற்றும் தனியார்துறையினர் பயணிகளின் இடர்பாடு பற்றிக் கவனம் எடுக்காதமை தொடர்பிலும் பயணிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (இ)

# வவுனியாவில் உழுந்து செய்கையாளர் பாதிப்பு



கடும் வறட்சி மற்றும் தற்போது பெய்து வரும் மழை காரணமாக வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டு வந்த உழுந்துச் செய்கை பாதிப்படைந்துள்ளது.

வவுனியாவில் கடந்த காலங்களை விட இந்த முறை அதிகமாக 18 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்துச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து நிலவி வந்த வறட்சி காரணமாக உழுந்து செய்கை கடுமையாகப் பாதிப்படைந்துள்ளதுடன், பனியின் தாக்கத்தால் தப்பியிருந்த உழுந்துச்செடிகளும் தற்போது அறுவடைக் காலத்தில் பெய்யும் மழை காரணமாக பாதிப்படைந்துள்ளன.

இதனால் உழுந்துச் செய்கையாளர்கள் பயிர்ச் செய்கை செலவைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வவுனியாவின் பின்தங்கிய மற்றும் மீள்குடியேற்ற கிராமங்களில் கடன்களைப் பெற்றும், அடைவு வைத்தும் உழுந்துச் செய்கையில் ஈடுபட்ட பலர் தற்போது அவை பாதிப்படைந்துள்ளமையால் பொருளாதார ரீதியாக கடுமையாகப் பாதிப்படைந்துள்ளனர்.

இதனால் உழுந்துச்செய்கை பாதிப்பு தொடர்பில் கவனம் செலுத்தி அரசு நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் உழுந்துச் செய்கையாளர்கள் கோரிக்கை விட்டுள்ளனர். (ஐ-100)



கியூடெக் கரித்தாஸ் நிறுவன சமாதான நல்லிணக்க செயல் திட்டத்தின் கீழ் கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் அருட்தந்தை இயூயின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் சமாதானத்துக்கான வலுவூட்டலூடாக மாணவர்களுக்கு நம்பிக்கையூட்டலும் ஒன்றிணைதலுக்குமான கருத்துக்களும் குளமங்கால் றோ. க. பாடசாலையிலும், மாதகல் சென்.யோசவ் பாடசாலையிலும் அண்மையில் இடம்பெற்றன. (ஐ)

## ஜேர்மன் தமிழ்க் கல்விக் கழகத்தின் பேர்ளின் தமிழாலயத்தின் பொங்கல்





பேர்ளின் தமிழாலயத்தின் பொங்கல் விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. மண்ணுக்காக மரணித்த மாவீரர்களுக்கும் மற்றும் மக்களுக்குமான அகவணக்கத்தைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றலுடன் இந்த நிகழ்வு ஆரம்பமாகியது. மாணவர்களால் தமிழர்களின் இயல், இசை, நாடக நிகழ்வுகள்; கவியரங்கம், நடனங்கள் போன்ற நிகழ்வுகளும் அரங்கேற்றப் பட்டன.(ஐ)

## ஜேர்மனியில் கிட்டுவின் நினைவு நிகழ்வு




ஜேர்மனி ஸ்ருட்காட் மற்றும் வூப்பெற்றால் நகர்களில் கேணல் கிட்டு உட்பட பத்து மாவீரர்களின் நினைவெழுச்சி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த வணக்க நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனி ஸ்ருட்காட் மற்றும் வூப்பெற்றால் ஆகிய நகரங்களில் எழுச்சியுடன் நடைபெற்றது.

இந்த எழுச்சி நிகழ்வில் பொதுச் சுடரேற்றலுடன், தமிழீழத் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து ஈகச் சுடர் ஏற்றப்பட்டு அக வணக்கத்துடன் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. (ஐ)





## தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அரசியல் தீர்வு அமைந்திட வேண்டும்

### பிரித்தானிய தொழிற்கட்சி தெரிவிப்பு



தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்காதிருப்பது கவலையை அளிக்கிறது என்று பிரித்தானியாவின் பிரதான எதிர்க் கட்சியான தொழிற்கட்சியின் பன்னாட்டு அபிவிருத்தித்துறை நிழல் அமைச்சர் கேற் ஒசேமோர் தெரிவித்துள்ளார்.

தொழிற்கட்சியின் எட்மன்ரன் தொகுதிக்கான செயலணியின் நிதி திரட்டல் விருந்துபசார நிகழ்வு கடந்த வியாழக் கிழமை இரவு எட்மன்ரன் கிறீன் பகுதியில் இடம்பெற்றது.

இதில் தொழிற்கட்சிக்கு ஆதரவான தமிழர்கள் அமைப்பின் தலைவர் சென் கந்தையாவின் அழைப்பை ஏற்றுத் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். இதன்போது கருத்து வெளியிட்ட தொழிற்கட்சியின் பன்னாட்டு அபிவிருத்தித்துறை நிழல் அமைச்சர் கேற் ஒசேமோர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈழத்தீவில் தொடரும் மனித உரிமை மீறல்களையிட்டும், ஐ.நா. தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தத் தவறியிருப்பதையிட்டும் தொழிற்கட்சி கவலை கொள்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் தொழிற் கட்சியின் பிறென்ற் சென்றல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டோன் உட்படப் பலரும் பங்கேற்றிருந்தனர். (ஐ)

### பண்பாட்டு அடையாளப்படுத்தலுடன்

# பிரான்ஸ் சிலம்பு அமைப்பின் பொங்கல்



பிரான்ஸ் சிலம்பு அமைப்பின் 'புலம்பெயர் தமிழர் திருநாள்' பண்பாட்டு விழாவுக்குரிய அடையாளப் படுத்தலுடன் இடம்பெற்றது.

இந்தப் புத்தாண்டு 11 ஆவது தடவையாக பாரிஸ்-20 பெரு நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.


நிகழ்வுகள் வெளியரங்கில் கூட்டுப் பொங்கலிடுதல், கண்காட்சி, நிகழ்வரங்கு, அரங்காற்றுகை என்ற தளங்களில் நிகழ்த்தப்பட்டிருந்தன. அதற்கு முந்தைய நாளில் ஆய்வரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மொழி, சமூகம், கலை, இலக்கியம், புலம்பெயர் வாழ்வியல் சார்ந்த அக்கறையின்பாற்பட்ட அறிவுசார் செயற்பாடாக பார்க்கக்கூடியது இந்த ஆய்வரங்க முன்னெடுப்பு.


அங்கு அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி மையத்தில் பாரம்பரிய உணவு, பாரம்பரிய கலை மற்றும் பயன்பாட்டுப் பொருள்கள், சமூகம் சார்ந்த பிரக்ஞையை வெளிப்படுத்தும் ஓவியர் மருதுவின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அங்கு புலம்பெயர் சிறார்களது அகரம் எழுதல் நிகழ்வை மிகுந்த நெகிழ்வோடு ஓவியர் மருது, பேராசிரியர் மௌனகுரு ஆகியோர் மேற்கொண்டனர்.

பறை முழங்க, பாடல்கள் ஒலிக்க, கும்மி கொட்டியபடி கொண்டாட்ட உணர்வுடன் மாநகர சபை வெளிவளாகத்தில் கூட்டுப் பொங்கலிடல் இடம்பெற்றது.

தாயகத்திலிருந்து பேராசிரியர் மௌனகுரு, தமிழகத்திலிருந்து ஓவியர் மருது ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றிருந்தனர். பிரித்தானியாவிலிருந்து சொல்லிசைக் கலைஞர் சுஜித்ஜி, இசையமைப்பாளர் சந்தோஸ் ஆகியோரும் சிறப்பு பங்கேற்பாளர்களாக வருகை தந்திருந்தனர்.

நோர்வேயிலிருந்து கலாசாதனா கலைக்கூட நடனக் கலைஞர்களும், கவிஞரும் நடனநெறியாளருமான கவிதாவும் பங்கேற்றிருந்தனர். (ஐ)






காலைக்கதிர்
Kalaikkathir




பொன்.வேணு கிருஷ்ணா




### அமெரிக்க அதிபராக பதவியேற்ற பின்னர், ட்ரம்பின் முதல் நடனம்

அமெரிக்காவின் 45 ஆவது அதிபராக ஜனவரி 20 ஆம் நாள் பதவியேற்ற பின்னர், அதன் மகிழ்ச்சியைத் தன்னுடைய ஆதரவாளர்களுடன் ட்ரம்ப் கொண்டாடினார்.



முதலில் ட்ரம்ப் அமெரிக்காவின் முதல் பெண்மணியான தன்னுடைய மனைவியோடு நடனமாடியமையைத் தொடர்ந்து, துணை அதிபராக பதவியேற்றுக் கொண்ட மைக்கேல் பென்ஸும், டிரம்பின் குடும்பத்தினரும் அடுத்தடுத்து அந்த நடனத்தில் இணைந்து ஆடி மகிழ்ந்தனர்.



### 'ஒபாமா கேர்' திட்டம் தொடர்பாக மாற்றங்கள் கொண்டு வர ட்ரம்ப் முதல் கையெழுத்து

முந்தைய அமெரிக்க அதிபரான பராக் ஒபாமா கொண்டு வந்த சுகாதார பராமரிப்புச் சீர்திருத்தங்களில் மாற்றம் கொண்டுவருவதை நோக்கமாக கொண்டு ஒரு நிர்வாக ஆணையில் கையெழுத்திட்டு, அமெரிக்க அதிபராகத் தனது முதல் நடவடிக்கையை டொனால்ட் ட்ரம்ப் தொடக்கினார்.



'ஒபாமா கேர்' என அழைக்கப்படும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தொடர்பான சட்டங்களின் மூலம் ஏற்படும் பொருளாதாரச் சுமையைக் குறைக்குமாறு முகாமைகளுக்கு ட்ரம்ப் கையெழுத்திட்ட பிரகடனம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த (வெள்ளிக்கிழமை 20.01.2017) அமெரிக்க அதிபராக ஆற்றிய தனது தொடக்க உரையில், அமெரிக்காவின் நலனை முதன்மை படுத்தப் போவதாகவும், கைவிடப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் பரவலாக குற்றங்கள் நடப்பது ஆகிய அமெரிக்க முன்னேற்றம் மற்றும் கலாசாரத்தைக் குலைக்கும் படுகொலைகளை நிறுத்தப் போவதாகவும் டொனால்ட் ட்ரம்ப் உறுதி எடுத்துக் கொண்டார்.

இதனிடையே, 21.01.2017 (சனிக்கிழமை) மாலையில் வாஷிங்டனில் நடந்த பெண்கள் பேரணியில் 2 லட்சம் பேர் கலந்து கொண்டனர்.

இன மற்றும் பாலின ரீதியான சமத்துவங்களுக்குப் புதிய அமெரிக்க அதிபராகப் பதவியேற்றுக் கொண்ட ட்ரம்பின் நிர்வாகத்தில் அச்சுறுத்தல் இருக்கும் என்று உணர்வதை சுட்டிக் காட்டத் தாங்கள் விரும்புகிறோம் என இப் பேரணியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### ட்ரம்பை முதலில் சந்திக்கும் உலக தலைவர்களில் ஒருவராக தெரீசாமே





வெள்ளிக்கிழமை (27.01.2017) அமெரிக்க அதிபர் டொனால் ட்ரம்பை, உலகத் தலைவர்களில் முதலாவதாகச் சந்திக்கிறபோது, பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் சிறப்புமிக்க உறவு என்று அவர் கூறுகின்ற ஓர் உறவை உருவாக்குவது பற்றிக் கலந்துரையாடப் போவதாகப் பிரிட்டிஷ் பிரதமர் தெரீசா மே தெரிவித்திருந்தார்.

சாத்தியமாகும் ஒரு வர்த்தக ஒப்பந்தம், நேட்டோ, தீவிரவாதம் ஆகிய அம்சங்கள் பற்றி தெரீசா மே ட்ரம்புடன் கலந்துரையாடுவதை எதிர் பார்ப்பதாக பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இரு நாடுகளும் பொதுவான சவால்களை எதிர்கொள்கின்றன, அச்சுறுத்தல்களைக் கண்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெண்கள் பற்றி டொனால்ட் ட்ரம்பின் முந்தைய கருத்துக்களை பற்றிக் கேட்ட போது, ஏற்றுக்கொள்ள முடியாததாக எதையாவது கண்டறிந்தால், அது பற்றி டிரம்பிடம் கூறுவதற்கு அஞ்சப் போவதில்லை என்று தெரீசா மே தெரிவித்திருந்தார்.

### பசிபிக் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திலிருந்து விலகும் ஆணையில் கையெழுத்திட்ட ட்ரம்ப்



பசிபிக் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் என்றழைக்கப்படும் டிபிபி ஒப்பந்தத் திட்டத்தில் இருந்து அமெரிக்கா தன்னை விலக்கிக்கொள்ளும் ஒரு நிர்வாக ஆணையில் கையெழுத்திட்டு, தனது தேர்தல் பிரசார உறுதிமொழியொன்றை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் நிறைவேற்றியுள்ளார்.

முன்னாள் அமெரிக்க அதிபரான பராக் ஒபாமாவின் ஆசிய கொள்கையின் அச்சாணியாக இந்த 12 நாடுகள் வர்த்தக ஒப்பந்தம் விளங்கியது.

இந்த ஒப்பந்தத்தை ஒரு கையெழுத்தின் மூலம் முறித்துக் கொண்ட டொனால்ட் ட்ரம்ப், இது குறித்து கூறுகையில், "அமெரிக்க தொழிலாளர்களுக்கு ஒரு மிகப் பெரிய நன்மையை நாங்கள் தற்போது செய்துள்ளோம்" என்று குறிப்பிட்டார்.


பசிபிக் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாகப் பிளவுபட்ட அமெரிக்க நாடாளுமன்றம் இதற்கான இசைவை அளிக்காததால், டி.பி.பி. தொடர்பான நிர்வாக ஆணையில் டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டமை ஒரு வெறும் குறியீட்டளவிலான நடவடிக்கை என்றே கருதப்படுகிறது.

பசிபிக் பிராந்திய வர்த்தக உடன்பாட்டைக் கைவிடுவது என டொனால்ட் ட்ரம்ப் எடுத்துள்ள முடிவு குறித்து சீனா வெளியிட்டுள்ள கருத்தில், வர்த்தம் மற்றும் வரிப் போட்டியில் யாரும் வெல்லப் போவதில்லை எனக் கூறியுள்ளது.

ஆனால், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியவை அந்த ஒப்பந்தத்தை காப்பாற்ற முடியும் என நம்புகின்றன.

சீனாவும் இதர ஆசிய நாடுகளும் இதில் இணையவேண்டும் என அவை வலியுறுத்தியுள்ளன.

### அமெரிக்காவுக்கு வருகை தர மோடிக்கு ட்ரம்ப் அழைப்பு



அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அமெரிக்கா வருமாறு அழைத்துள்ளார். இரு தலைவர்களுக்கு மிடையே நடந்த ஒரு தொலைபேசி உரையாடலின் போது, இந்த அழைப்பை ட்ரம்ப் விடுத்தார்.

''உலகெங்கும் உள்ள சவால்களை சமாளிக்க இந்தியாவை ஓர் உண்மையான நண்பனாகவும், கூட்டாளியாகவும்'' ட்ரம்ப் கருதுகிறார் என அமெரிக்கா கூறியது.

பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளில், அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான கூட்டுறவைப் பலப்படுத்தும் வாய்ப்புகள் பற்றி இரு தலைவர்களும் விவாதித்தனர் என அமெரிக்கா கூறியது.

தானும் ட்ரம்ப்பை இந்தியா வருமாறு அழைத்தார் என மோடி கூறினார்.

### மெக்சிக்கோவில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ள எல்லைச் சுவர் திட்டம்

அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோ இடையே கட்டப்பட உத்தேசித்துள்ள

*Trump says meeting with Mexican president would have been 'fruitless'* (http://www.rawstory.com/)

President Donald Trump said on Thursday that his now-scrapped meeting with Mexican President Enrique Pena Nieto would have been "fruitless" if Mexico will not agree to treat America "with respect."

"The President of Mexico and myself have agreed to cancel our planned meeting for next week," Trump told Republican lawmakers gathered in Philadelphia for a retreat.

"Unless Mexico is going to treat the United States fairly – with respect – such a meeting would be fruitless. And I want to go a different route," said Trump, who wants to build a wall on the southern border of the United States. He says Mexico will pay for it but Mexico insists it will not.

எல்லைச் சுவர் தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பை வாஷிங்டனில் மெக்சிக்கோ அதிபர் என்ரிக் பினா நியேடோ சந்திக்கவிருந்த சூழலில், அக்கூட்டத்தை ரத்து செய்யுமாறு என்ரிக் பினா நியேடோவுக்கு அழுத்தம் அதிகரித்து வந்தது.

இந்தக் கூட்ட அறிவிப்பு மெக்சிக்கோவெங்கும் ஒரு பரந்த சீற்றத்தை





தூண்டியுள்ளது. அந்நாட்டின் எதிர்க்கட்சியினர் இதனை ஒரு விரோதச் செயல் என்று அடையாளப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் மெக்சிக்கோ எல்லைச் சுவர் கட்டும் நிறைவேற்று நிர்வாக ஆவணத்தில் கையெழுத்திட்டார்.



(கேள்வி தொடரும்...)



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.





# தமிழ்த் தேசிய எழுச்சி

42

## பெங்களூர் பேச்சுக்கள்

துதவிப் பொலிஸ் மா அதிபர் மோகனதாஸின் கீழ் இயங்கும் தமிழ் நாட்டு இரகசிய பொலிஸார் விடுதலைப் புலிகளின் இரகசியத் தங்குமிடங்கள், செயலகங்கள் , பயிற்சி முகாம்கள் ஆகியனவற்றில் திடீர்ச் சோதனை நடத்தி , நவீன தொலைத்தொடர்பு கருவிகள் அனைத்தையுமே பறிமுதல் செய்தனர். இதன் விளைவாகப் பிரபாகரனுக்கும் தமிழீழத்திலும், தமிழகத்திலும் செயற்பட்ட விடுதலைப் புலிகளின் படை முகாம்களுக்கும் பயிற்சி முகாம்களுக்கும் மத்தியிலான தொடர்பு திடீரெனத் துண்டிக்கப்பட்டது. சென்னை நகரிலிருந்து தனது கட்டளைக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை இயக்கி வந்த பிரபாகரன், தகவல் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டமையால் செயலிழந்து முடங்கினார். இந்திய மத்திய, மாநில அரசுகள் கூட்டாக இணைந்து மேற்கொண்ட இந்த நடவடிக்கை பிரபாகரனைக் கொதிப்படையச் செய்தது. தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரைத் தொடர்புகொள்ள நான் மேற்கொண்ட முயற்சிகள் எவையுமே பலனளிக்கவில்லை. அவர் சேலத்தில் தங்கியிருக்கிறார் எனவும் அவருடன் தொடர்பு கொள்வது சாத்தியமில்லை எனவும் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

கோபாவேசத்துடன் எனது இருப்பிடத்துக்கு வந்த பிரபாகரன், ''நரம்பு மையத்தில் கை வைத்து விட்டார்கள். இதனை அனுமதிக்க முடியாது. எப்படியாவது இந்தக் கருவிகளைத் திருப்பிப் பெற வேண்டும்.''- என்றார். எம்.ஜி.ஆர். மீதும் அவருக்கு ஆத்திரம். மோகனதாஸ் எம்.ஜி.ஆரின் கையாள். ஆகவே, முதல்வருக்குத் தெரியாமல் இந்தக் காரியம் நடந்திராது என்பது பிரபாகரனின் வாதம். மத்திய, மாநில அரசுகளை இனிமேல் நம்ப முடியாது என்றும் தொடர்ந்தும் தமிழ்நாட்டில் தங்கியிருக்கின்றமை தனது உயிருக்கே ஆபத்தாக முடியும் என்றும் சொன்னார். தொலைத் தொடர்புக் கருவிகளைத் திருப்பிப் பெறுவது எப்படி என நான் மூளையைப் பிய்த்துக் கொண்டிருந்த போது, ''அதற்கு ஒரே வழிதான் உண்டு'' என்றார் பிரபாகரன். அப்பொழுதுதான் அந்த வியப்பூட்டும் தீர்மானத்தை அறிவித்தார். தொலைத் தொடர்புக் கருவிகளைத் திருப்பிக் கொடுக்குமாறு கோரி தான் சாகும்வரை உண்ணாவிரதம் கடைப்பிடிக்கப் போகிறார் எனச் சொன்னார். உடனடியாகவே, அந்தக் கணத்திலிருந்தே எனது வீட்டில் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போகிறார் எனக் கூறினார். நான் சிறிது தடுமாறிப் போனேன். என்ன சொல்லியும் அவர் கேட்டபாடில்லை. தனது தீர்மானத்தில் பிரபாகரன் மிகவும் உறுதியாக நின்றார். என்னவாக முடியுமோ என்ற அச்சம் எனது ஆன்மாவின் ஆழத்தில் படர்ந்தது. பிரபாகரன் நம்பிக்கையுடன் தனது உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். தனது முயற்சி நிச்சயமாக வெற்றி பெறும் என அவரது உள்ளுணர்வுக்குத் தெரிந்தது போலும். உணவையும் நீரையும் துறந்த கடும் விரதமாக, சென்னை இந்திரா நகரிலுள்ள எனது வீட்டில் தனது சாகும்வரையிலான சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பித்தார் பிரபாகரன். உண்ணாவிரதம் ஆரம்பமாகியதை அடுத்து உடனடியாகவே நான் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி, பிரபாகரனின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கான காரணத்தை உலகுக்குத் தெரியப்படுத்தினேன். மறுநாள் காலை விடுதலைப் புலிகளின் தலைவரது சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத் துக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தமிழக ஊடகங்கள் செய்தியைப் பிரசுரித்தன. அந்தச் செய்தி தமிழ்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியது. உடனடியாகவே தமிழக அரசியல்வாதிகள், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், ஊடகவியலாளர்கள், தமிழீழ விடுதலை விரும்பிகள் என்ற ரீதியில் ஏராளமானோர் எனது இல்லத்துக்கு வருகை தந்து புலிகளின் தலைவருக்குத் தமது நல்லாதரவைத் தெரிவித்தார்கள். ஆர்வம் கொண்ட தமிழ்நாட்டுப் பொதுமக்களும் எமது வீட்டுக்கு முன்பாகப் பெருந்தொகையில் அணி திரண்டு உண்ணாவிரதத்துக்கு ஆதரவாகக் குரல் எழுப்பினார்கள். பல்வேறு அரசியற் கட்சிகளும், சமூக அமைப்புக்களும், பத்திரிகைகளும் மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டன. பிரபாகரனின் சாகும்வரை உண்ணா விரதப் போராட்டம் தமிழ்நாட்டில் ஓர் அரசியல் சூறாவளியைக் கிளப்பிவிட்டது. தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். கதி கலங்கிப் போனார். பிரபாகரனின் உண்ணா விரதப் போராட்டம் தமிழ்நாட்டில் ஓர் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்துமென அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. விடுதலைப் புலிகளின் தொலைத்தொடர்புக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்ட விவகாரம் தனக்குத் தெரியாது என அறிக்கை வெளியிட்டார். மாநில அரசு, மத்திய அரசு மேல் பழி சுமத்த, மத்திய அரசு மாநில அரசு மீது குற்றம் சுமத்தியது. இறுதியில் மத்திய, மாநில அரசுகள் ஒன்று

> *பிரபாகரனின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு இந்திய ஊடக உலகம் கொடுத்த முக்கியத்துவமும், ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டத்துக்கு மத்திய, மாநில அரசுகள் அநீதி இழைத்துள்ளன என எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட தீவிர பிரசாரமும் தமிழக முதல்வரை ஒரு சங்கடமான நிலைக்குத் தள்ளியது.*



சேர்ந்து தமிழகக் காவல்துறை மீது பழியைச் சுமத்தின. ஈழ விடுதலைப் போராட்டமும், விடுதலைப் புலிகள் இயக்கமும் தமிழ்நாட்டில் மிகப் பிரபல்யம் பெற்றிருந்த காலகட்டம் அது. புலிகளின் வீரம் செறிந்த ஆயுதப் போராட்டமும் அவர்களது அற்புதமான தியாகங்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களைப் பெருமிதம் கொள்ளச் செய்திருந்தன. தலைவர் பிரபாகரன் மாவீரனாகவும் ஒரு வரலாற்று நாயகனாகவும் போற்றப்பட்டு மதிக்கப்பட்டார். அத்தகைய ஒரு சுதந்திர வீரனை இம்சைப்படுத்தி, ஈழத் தமிழரின் சுதந்திரப் போராட்டத்துக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் செயற்பட்டமை தமிழக மக்களுக்கு சினத்தைக் கொடுத்தது. சிங்கள இனவாத ஆட்சியாளரைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருந்த புலிகள் இயக்கத் தலைமை மீது காவல்துறை யினர் பழிவாங்கும் நடவடிக்கையை எடுக்க அனுமதி வழங்கியமையையிட்டு எம்.ஜி.ஆரின் நிர்வாகம் மீதும் கண்டனக் குரல் எழுப்பப்பட்டது. சாகும்வரை உண்ணாவிரதம் தொடர்ந்து, விடுதலைப் புலிகளின் தலைவருக்கு உயிராபத்து நிகழ்ந்தால் அதனால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகள் பாரதூரமானவையாக அமையுமென எம்.ஜி.ஆர். அச்சம் கொண்டார்.

பிரபாகரன் உண்ணாவிரதம் ஆரம்பித்து இரண்டாவது நாள் தமிழக முதல்வர் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார். தொலைத் தொடர்புச் சாதனங்களைத் திருப்பி ஒப்படைக்குமாறு தான் தமிழகக் காவல் துறையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் எனவும் உடனடியாக உண்ணா விரதத்தைக் கைவிடுமாறு பிரபாகரனிடம் ஆலோசனை கூறுமாறும் எம்.ஜி.ஆர். என்னிடம் கேட்டுக்கொண்டார். எம்.ஜி.ஆரின் வேண்டுகோளுக்கு பிரபாகரன் இணங்கவில்லை. தொலைத் தொடர்புக் கருவிகளைத் திருப்பிப் பெறும் வரைக்கும் தான் உண்ணா விரதத்தைக் கைவிடப் போவதில்லை என அவர் உறுதிபட நின்றார். பிரபாகரனின் பிடிவாதமான நிலைப்பாட்டைத் தமிழக முதல்வருக்கு நான் தெளிவாக எடுத்துக்கூறினேன். ''பிரபாகரன் ஆழமாக வேதனை அடைந்திருந்தார். தொலைத்தொடர்புக் கருவிகளைப் பறித்து, தமிழீழக் களங்களிலுள்ள போராளிகளுடன் தொடர்பைத் துண்டித்தமை பாரதூரமான ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாக அவர் கருதுகிறார். தொலைத்தொடர்புச் சாதனங்கள் திருப்பி அவரிடம் ஒப்படைக்கப்பட்டாலன்றி அவர் உண்ணா விரதத்தைக் கைவிடப் போவதில்லை'' என்று அவரிடம் கூறினேன். எம்.ஜி.ஆர். சிறிது நேரம் சிந்தித்தார். தமிழகக் காவல்துறை உயர்பீடத்துடன் கலந்தாலோசித்து சீக்கிரமாக ஒரு முடிவு எடுப்பதாகச் சொன்னார். விடுதலைப் புலிகளின் தொலைத்தொடர்புக் கருவிகளைப் பறிமுதல் செய்த விவகாரம் தமிழ்நாட்டில் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்துமென எம்.ஜி.ஆர். எதிர்பார்க்கவில்லை.

பிரபாகரனின் உண்ணா விரதப் போராட்டத்துக்கு இந்திய ஊடக உலகம் கொடுத்த முக்கியத்துவமும், ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டத்துக்கு மத்திய, மாநில அரசுகள் அநீதி இழைத்துள்ளன என எதிர்க்கட்சிகள் மேற் கொண்ட தீவிர பிரசாரமும் தமிழக முதல்வரை ஒரு சங்கடமான நிலைக்குத் தள்ளியது. ஈழத் தமிழரது விடுதலைப் போராட்டத்தின் காவல் தெய்வம் என அவருக்கு இருந்த புகழ்ச்சியையும் இழந்து, புலிகளின் தலைமையுடன் கொண்டிருந்த நெருங்கிய நட்புறவையும் துறந்துவிட எம்.ஜி.ஆர். விரும்பவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, பிரபாகரனுக்கு உண்ணாவிரதத்தால் ஏதாவது, தீங்கு நேருமோ என அவர் அச்சம் கொண்டார். புலிகளின் தலைவருக்கு உயிராபத்து நிகழ்ந்தால் அதன் அரசியல் விளைவுகள் படுபாதகமாக இருக்கும் என்பதும் அவருக்கு நன்கு தெரியும். இது இவ்வாறிருக்க, புலிகளின் தொலைத் தொடர்புக் கருவிகள் பறிக்கப்பட்டமைக்கும் மத்திய அரசுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என இந்திய மத்திய அமைச்சரான சிதம்பரம் அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கை தமிழக அரசு மீது முழுப் பழியையும் சுமத்தியதால் எம்.ஜி.ஆருக்கு அது அவமானத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தின. இப்படியான நிலைமைகளால் சினமடைந்த எம்.ஜி.ஆர்., விடுதலைப் புலிகளின் தொலைத்தொடர்புக் கருவிகளை உடனடியாகத் திருப்பி ஒப்படைக்குமாறு தமிழகக் காவல்துறையினருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

(தொடரும்...)

# சீனாவுக்கு மட்டும் சந்தர்ப்பம் வழங்குமாறு இலங்கையிடம் ஒருபோதும் கோரவில்லை

## சீன வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



சீனாவுக்கு மட்டும் சந்தர்ப்பம் வழங்குமாறு நாம் ஒருபோதும் இலங்கை அரசிடம் கோரியதில்லை என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹுவா சுன்யிங் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தில் சீன நிறுவனங்களின் முயற்சியாண்மை மட்டுமே முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இலங்கையிடம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கோரியதில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், முதலீட்டு வலயத்துக்கு எதிராக அம்பாந்தோட்டையில் சிறியளவில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டதாகவும் அது, பிழையான புரிதல் காரணமாக ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், அபிவிருத்தித் திட்டம் குறித்து போதியளவு தெளிவற்ற காரணத்தால் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இலங்கைக்கு உச்ச அளவில் உதவிகளை வழங்கவே சீனா விரும்புகின்றது என்றும் தெரிவித்துள்ளார். (எ)

# முதலாவது நிவாரண உபசரணை சேவைகள் நிலையம் அனுராதபுரத்தில்!

கொழும்பு, ஜன.30

இலங்கையில் முதலாவது நிவாரண உபசரணை சேவைகள் நிலையம் அனுராதபுரத்தில் அமைக்கப்படவுள்ளது.

இலங்கை அரசு, சாந்தி அமைப்பு மற்றும் ஆஸ்திரேலியாவின் பதிவுசெய்யப்பட்ட அறக்கொடை நிறுவனம் ஒன்றுடன் இணைந்து இந்த நிலையம் அனுராதபுரத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இந்தத் திட்டம் சிறுநீரக நோய் நிவாரணத்துக்கான ஜனாதிபதி செயலணி, சுகாதார அமைச்சு, இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இலங்கை நிவாரண உபசரணை சங்கம் மற்றும் இலங்கை மருத்துவ சங்கம் என்பன இந்தத் திட்டத்தை அங்கீகரித்துள்ளன.

நிவாரண உபசரணை சேவை என்றால் சிறுநீரக நோய், புற்றுநோய் போன்ற நாள்பட்ட நோய்களால் அவதியுறும் நோயாளிகளின் உடல், உள மற்றும் ஆன்மீக திருப்திக்காக நடவடிக்கை மேற்கொள்ளும் நிபுணத்துவ வைத்திய சேவை தற்போது பல்வேறு அறக்கொடை நிறுவனங்களினூடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான 4 நிவாரண சேவை நிலையங்கள் இலங்கையில் செயற்படுகின்றனவாக இருந்தாலும் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் என்பவற்றுக்கு விசேட நிவாரண உபசரணை சேவை ஒன்றுக்கு கட்டாய தேவை நிலவுகின்றது.

உத்தேச நிலையத்தை அனுராதபுரத்தில் அமைப்பதற்காக சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் சுமார் 40 நோயாளிகள் தங்கி சிகிச்சைபெறும் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் வெளிநோயாளர்களுக்கான நடமாடும் நிவாரண உபசரணை சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனூடாக வைத்தியசாலைகளில் ஏற்படும் இடநெருக்கடிக்குத் தீர்வாக இந்த நிலையத்தில் அல்லது நோயாளிகளின் வீட்டிலிருந்தே அவர்களைப் பராமரிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. (எ)

## தினசரி ராசி பலன் 30.01.2017

30.01.2017 திங்கட்கிழமை துர்முகிவருஷம் 2017 ஆம் ஆண்டு தைத்திங்கள் 17ஆம் நாள் திங்கட்கிழமை திருதியை பி.இ.4.43 வரை. பின் சதுர்த்தி. சதயம் இரவு 11.04 வரை. பின் பூரட்டாதி. சித்தம் இரவு 11.04 வரை. பின் சுபயோகம். ராகுகாலம்: காலை 28.01 முதல் 9.28 வரை. சுபநேரம்: பகல் 12.35 முதல் 2.05 வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: தைமாத வளர்பிறை திருதியை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று சுபீட்சமான நாள். பணம் பல வழியில் வந்துசேரும். சிலருக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். கலைஞர்களுக்கு புது நிறுவனங்களிலிருந்து வேலை வாய்ப்புத் தேடிவரும்.

**ரிஷபம்:** இன்று மத்திம பலன்கள் காணப்படுகின்றன. அலுவலகத்தில் பொறுப்புகள் அதிகமாகும். தேவையில்லாத வழிகளில் பணச்செலவு ஏற்படும்.

**மிதுனம்:** இன்று யோகமான பலன்கள் காணப்படுகின்றன. எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு என்பன கிடைக்கும்.

**கடகம்** : இன்று கவலையான நாள். நெருங்கிய நண்பர்களைப் பிரிய நேரலாம். உடல் நலக்குறைகள் ஏற்படும்.

**சிம்மம்** : இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. முயற்சிகளில் தடைதாமதம் உண்டாகும். பயணங்களில் கவனம் தேவை. கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**கன்னி:** இன்று மேன்மையான நாள் . எதிர்பார்க்கும் பணவரவுகள் தடையில்லாமல் வந்துசேரும். வீடு, நிலம் வாங்கும் யோகம் சிலருக்கு உண்டாகும்.

**துலாம்:** இன்று இனிமையான நாள். நண்பர்களும், உறவினர்களும் பக்கபலமாக இருந்து உதவுவார்கள். பிரிந்திருந்தவர்கள் மீண்டும் இணைவார்கள்.

**விருச்சிகம்:** இன்று சஞ்சலனமான நாள். மனம் குழப்ப நிலையில் இருக்கும். பணவரவு குறையும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினை உண்டாகும்.

**தனுசு:** இன்று விருத்தியான நாள் . வருமானம் உயர்வடையும். வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**மகரம்:** இன்று நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். வேலைதேடித் திரிவோருக்கு வேலை கிடைக்கும்.

**கும்பம்:** இன்று அதிஷ்ட நாள். பணபலம், மனபலம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு அரச வழியால் அதிக நன்மைகள் கிடைக்கும்.

**மீனம்:** இன்று துன்பமான நாள். உத்தியோகத்தர்களுக்கு தொழிற்சிரமங்கள் ஏற்படும். கொடுக்கல்,வாங்கலில் பிணக்குகள் உண்டாகும்.

கும்பம்: மீனம்: சந்திராட்டமநாள் புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் இந்நாளில் நற்கருமங்களைத் தவிர்க்கவும்.

# இனவாதத்தின் அடிப்படையில் அதிகாரத்தைப்பெற முடியாது

## தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு



இனவாத அடிப்படையில் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது என புதிய கிராமம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அம்பகமுவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனவாதத்தைக் தூண்டும் முயற்சிக்கு சிங்கள மற்றும் தமிழ் மக்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டார்கள்.

நாட்டில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது, இனவாதத்தை விதைத்து வந்தார். இனங்களுக்கு இடையில் பெரும் விரிசலை ஏற்படுத்தினார். - என்றார். (எ)

# தலவாக்கலை தோட்ட தொழிற்சாலையில் தீ! பொருள்கள் தீக்கிரை!!

தலவாக்கலை, கிரேட் வெஸ்டன் தோட்டத் தொழிற்சாலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை பரவிய தீ காரணமாகப் பெறுமதிவாய்ந்த பொருள்கள், தீயில் கருகி நாசமாகின என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், தோட்ட மக்களும் பொலிஸாரும் இணைந்து, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தொழிற்சாலையிலுள்ள இயந்திரம் ஒன்றில் ஏற்பட்ட மின்சார ஒழுக்கே, தீ விபத்துக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# உருண்டு வந்தன கற்பாறைகள்; வீடுகள் சேதம்



பதுளை, ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, ஒயிய உடவெறிய தோட்டத்தில், பெரிய கற்பாறைகள் சரிந்து விழுந்ததன் காரணமாக, குடியிருப்புகள் சேதமாகியுள்ளன. அத்துடன் அங்கிருந்த 15 குடும்பங்கள் வெளி யேற்றப்பட்டுள்ளன. எனினும், உயிர்ச்சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## காலாவதியான பொருள்கள் விற்பனை; வர்த்தகர்கள் 14 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.30 நுகர்வோர் அதிகாரசபையின் கட்டளைச் சட்டத்தை மீறி காலாவதியான பொருள்களை விற்பனை செய்த 14 வர்த்தகர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து யாழ்ப்பாணம் மேலதிக நீதிமன்றப் பதில் நீதிவான் கே. கேசவன் தீர்ப்பளித்தார்.

மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் கடந்த டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி யாழ். நீதிமன்ற எல்லைக்கு உட்பட்ட ஆனைக்கோட்டை, கொக்குவில், திருநெல்வேலி மற்றும் கோண்டாவில் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது காலாவதியான அழகு சாதனப் பொருள்கள், மென்பானம், பிஸ்கெட் வகைகள் என்பன கைப்பற்றப்பட்டிருந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை 14 வழக்குகளும் தனித்தனியாக மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன்போது வர்த்தகர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டிருந்தனர்.

அதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் பதில் நீதிவான் கேசவன். (இ-9)

# தொடர்ந்து சுமாராக மழை பெய்தால் நெற் செய்கை தப்பிப் பிழைக்கும்!

### மண்டைதீவு கமக்காரர் மகிழ்ச்சி; ஏக்கம்!!

மண்டைதீவு,ஜன.30 மண்டைத்தீவுப் பகுதியில் உள்ள வயல் நிலங்களில் நீர் வற்றிப் பயிர்கள் காய்ந்து வந்த நிலையில் மழை பெய்து வருவதால் மண்டைதீவு கமக்காரர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கதிர் குடலையில் இருந்து கக்கும் பருவத்தில் வயல் நிலங்களில் ஓர் அடி தண்ணீர் தேங்கி நின்றால் மட்டுமே நெல் மணிகள் முத்தும், விளைச்சலும் இருக்கும்.




ஒரு சாண் தண்ணீர் இருந்தாலும் பிழைத்துவிடும்; நீர் இல்லாமல் போனால் பிழைத்து இருந்து தான் பார்க்க போகாது என்றும் அவர்கள் கூறினர்.

''நீர் இல்லாது போனால் நெல் கதிர் வெளித் தள்ளினாலும் பால் கட்டுப் படாது 'சப்பி'யாக மாறி விடும். அண்மையில் பெய்து வரும் மழை நெல் வயல்களின் உயிரைப் பிடித்து வைக்குமா என்பதைப் பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்'' என்றும் கமக்காரர்கள் தெரிவித் தனர்.

அதேசமயம் புகையிலைத் தோட்ட கமக்காரர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இறைப்புக்கு இந்த மழையால் கிணறுகள் தாக்குப்பிடிக்கும். பெய்யும் மழைப் பருவம் தோட்டங்களுக்கு இரசாயனப் பசளை விசுறுவதற்கு மிகவும் பொருத்தமாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-20)

## வீடு புகுந்து கைபேசி திருடியவருக்கு மறியல்!

புத்தூர் கலைமதி பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்து கைபேசியைத் திருட முற்பட்ட அதே பகுதியைச்சேர்ந்த இளஞனை அச்சுவேலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் மேற்படி இளைஞன் திருடுவதற்கு முற்பட்ட வீட்டில் மேசன் வேலை செய்துள்ளான். இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சமையல் அறை முகடு வழியாக இறங்கி திருட முற்படும் போது வீட்டுக்கார பெண்மணி அவனைக் கண்டுவிட்டார்.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார். (இ -9)

## டிப்பர் சாரதி கைது!

அனுமதிப் பத்திரம் இன்றி புலோப்பளை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட வாகனத்தைக் கைப்பற்றியதுடன் அதன் சாரதியையும் கைது செய்தனர் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் புலோப்பளை பகுதியில் வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், சந்தேகத்துக்கிடமான முறையில் வந்த டிப்பர் வாகனத்தை மறித்துச் சோதனையிட்டனர். இதன் போது அதிகாலை நேரம் சட்டவிரோதமான முறையில் மண் ஏற்றியமை கண்டு பிடிக்கப்பட்டது.

வாகனத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பளை பொலிஸார் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர். (இ - 9)





வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட ஆயிரத்து 500 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் யாழ். நீராவியடி, இலங்கை வேந்தன் மண்டபத்தில் இடம்பெற்றது.

முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட ஆயிரத்து 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மகனும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவருமான சத்துரு சேனாரத்ன கலந்து கொண்டு மாணவர்களுக்கான உபகரணங்களை வழங்கினார். (ஐ)

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஜன.30 ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 8.30மணிக்கு ஆவரங்கால் மத்திய முன்பள்ளியில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி.சிவதர்சனும், சிறப்பு விருந்தினராக ஆவரங்கால் சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா அ.தில்லைநாதனும் கலந்து கொள்வர் (ச)

# கொடிகாமம் நகரைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை

### செயல்திட்டம் குறித்து கலந்துரையாடல்

கொடிகாமம் நகரம் பல லட்சம் ரூபா செலவில் நவீன முறையில் புனரமைக்கப்படவுள்ளது. இது விடயம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் தலைமைப் பணிமனையில் பிரதேச சபையின் செயலாளர் திருமதி முகுந்தினி கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கொடிகாமம் நகரம் தற்பொழுது முக்கிய கேந்திர நிலையமாக விளங்குகின்றது. பொதுச் சந்தை, ரயில் நிலையம், வடமராட்சி மக்களின் ரயில் மற்றும் போக்குவரத்துக்கு முக்கிய இடமாக கொடிகாமம் அமைந்துள்ளது.

இவ்வாறான காரணங்களால் கொடிகாமம் நகர்ப்பகுதி புனரமைக்கப்படவுள்ளது. முக்கியமாக பொதுச்சந்தை, மழைநீர், கழிவுநீர் வழிந்தோட வசதியாக வடிகால்கள், நவீன வசதிகள் அமைந்தனவாக பொது மலசல கூட வசதிகள், நகரத்தைச் சூழவுள்ள பகுதிகளுக்கு குடிதண்ணீர் வசதிகள், பஸ்தரிப்பு நிலையம் என்பனவும் இத்திட்டத்தின் கீழ் சீர்செய்யப்படவுள்ளன. குடிதண்ணீர் வழங்கல் மற்றும் வடிகால்அமைத்தல் என்பன வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படவுள்ளது, எனத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் நகரில் பொது மக்கள் அதிகமாகக் கூடுவதால் நகரின் மையப்பகுதிச் சந்தியில் விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் வீதிச்சமிக்ஞை (சிக்னல்) பொருத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

பொதுச்சந்தை நீண்ட காலத்துக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட பழைமையானது. எனவே இத்தொகுதி தற்பொழுது மாறிவரும் நகரமயமாக்கலுக்கு ஏற்ப ஒரே கூரையின் கீழ் அமைக்கப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் பிரதேச சபை யின் செயலாளர், கொடிகாமம் கிராம அபிவிருத்தி சங்கப் பிரதி நிதிகள், கொடிகாமம் வணிகர் கழகத்தின் பிரதிநிதிகள், கொடி காமம் அபிவிருத்திச் சங்க பிரதிநிதியான மருதங்கேணி பிரதேச செயலாளர் எஸ்.கனகேஸ்வரன், சாவகச்சேரி பிதேச சபையின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் சி.பத்மநாதன், கொடிகாமம் நகர பொதுச்சுகாதாரப் பரிசோதகர் றொனால்ட் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கொடிகாமம் பிரதேச சபையின் கச்சாய் உப அலுவலக பொறுப்பதிகாரி எஸ். திருச்செல்வி மற்றும் கு.குலச்சந்திரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (இ - 22)

## போலியோ சொட்டு மருந்து ஆரம்பித்து வைத்தார் பிரணாப் முகர்ஜி

டில்லி, ஜன.30

இந்தியாவில் 5 வயதுக்கு உட்பட்ட 17 கோடி குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்கான திட்டத்தை, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

போலியோவை முற்றிலுமாக ஒழித்துள்ள இந்தியா, அந்த நிலையைத் தக்க வைத்துக் கொள்ளும் வகையில் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளிக்கும் திட்டத்தை ஆண்டு தோறும் செயற்படுத்தி வருகிறது.

நடப்பு ஆண்டுக்கான இந்தத் திட்டத்தை, குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளித்து ஜனாதிபதி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (எ)

# கிருஷ்ணா அரசியலுக்கு முழுக்கு!



டில்லி, ஜன.30

காங்கிரஸ் மூத்த தலைவரும், கர்நாடக முன்னாள் முதல்வருமான எஸ்.எம். கிருஷ்ணா தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அந்தக் கட்சியின் தேசியத் தலைவர் சோனியா காந்திக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கர்நாடக மாநிலம், மண்டியாவைச் சேர்ந்த எஸ்.எம். கிருஷ்ணா (வயது84) காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவராக விளங்குகிறார். 1968 ஆம் ஆண்டு மண்டியா மக்களவைத் தொகுதியில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரான இவர் இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி, மன்மோகன் சிங் அமைச்சரவையில் மத்திய அமைச்சராகப் பொறுப்பு வகித்துள்ளார்.

கர்நாடகாவில் 1999 இல் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து எஸ்.எம்.கிருஷ்ணா முதல்வராக பதவி வகித்தார். அதையடுத்து 2004 - 2008 கால கட்டத்தில் மஹாராஷ்டிர ஆளுநராகவும் பணியாற்றினார்.

மத்தியிலும், மாநிலத்திலும் பல்வேறு பொறுப்புகளை வகித்த அவர் கடந்த சில ஆண்டுகளாக கட்சியில் ஓரங்கட்டப்பட்டார். 2013 இல் கர்நாடகாவில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றிய போது அவர் முதல்வர் பதவிக்கான பரிசீலனையில் இருந்தார். ஆனால் காங்கிரஸ் மேலிடம் சித்தராமையாவை முதல்வராக அறிவித்தது.

ஆட்சிக்கு வந்த சித்தராமையா, எஸ்.எம்.கிருஷ்ணா, ஜாபர் ஷெரீப் உள்ளிட்ட மூத்த தலைவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தார். இதனால் அதிருப்தி அடைந்த எஸ்.எம்.கிருஷ்ணா, அரசியலில் இருந்து ஒதுங்கியே இருந்தார்.

இந் நிலையில் சோனியா காந்திக்கு எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் தான் தீவிர அரசியலில் இருந்து ஓய்வுபெற முடிவு எடுத்துள்ளதாகவும், எனவே தன்னை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து விடுவிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பான தகவல் ஊடகங்களில் வெளியாகியதை அடுத்து கர்நாடக அரசியல் வட்டாரத்தில் பர பரப்பு ஏற்பட்டுள்ளது. (எ)

# 'பீட்டா' அமைப்பைத் தடை செய்தால் சட்டவிரோதச் செயல்கள் அதிகரிக்கும்

### அந்த அமைப்புக் கூறுகிறது



டில்லி, ஜன.30

பீட்டா, வெளிநாட்டைச் சேர்ந்த அமைப்பு என்று கூறுவது தவறு. பீட்டாவைத் தடை செய்தால் சமூகத்தில் சட்ட விரோத செயல்கள் அதிகரிக்கும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில், ஏறுதழுவுதல் மீதான தடையை விலக்கக் கோரி நடந்த பிரமாண்டமான போராட்டத்துக்கு வெற்றி கிடைத்ததை அடுத்து, பீட்டா அமைப்பைத் தடை செய்ய வலியுறுத்தி கோஷங்கள் எழுந்தன. தமிழகத்தைத் தொடர்ந்து, அண்டை மாநிலமான கர்நாடகாவிலும், 'பீட்டாவை' தடை செய்யக் கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

இந்தநிலையில், பீட்டா அமைப்பின் தலைவர், பூர்வா ஜோஷிபுரா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஏறுதழுவுதல் போராட்டத்தில் ஈடுபட்டோரைப் பின்பற்றி, கர்நாடகாவில், கம்பலா போட்டிக்கு ஆதரவாகப் போராடுவோர், பீட்டாவுக்குத் தடை கோரி கோஷம் எழுப்புகின்றனர். பீட்டா, வெளிநாட்டு அமைப்பு என்றும், அதைத் தடை செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

பீட்டா அமைப்பு, வெளிநாட்டைச் சேர்ந்தது என்று சொல்வது தவறு. பீட்டாவை தடை செய்தால், சமூகத்தில் சட்டவிரோதச் செயல்கள் அதிகரிக்கும்.

பீட்டா, இந்தியாவைச் சேர்ந்த, சட்டத்தை மதிக்கும் அமைப்பு. 17 ஆண்டுகளாக அஹிம்சை வழியைப்பின்பற்றி வரும் பீட்டா, சைவ உணவை வலியுறுத்தி வருகிறது. கைவிடப்பட்ட விலங்குகளுக்கு இலவச மருத்துவ உதவி அளித்து வருகிறது. - என்றுள்ளது. (எ)

### வீரத்தை வெளிப்படுத்தும் எருதுப் பந்தயமான

# கம்பலாவை நடத்த அனுமதி கோரி கர்நாடகாவில் தீவிர போராட்டம்



பெங்களூர், ஜன.30


தமிழகத்தின் ஏறுதழுவுதல் போராட்டத்தைப் பின்பற்றி எருதுப் பந்தயத்துக்கும் (கம்பலா) கர்நாடகாவில் போராட்டம் வலுத்து வருகிறது.

தமிழகத்தில் ஏறுதழுவுதலுக்கு ஆதரவாகப் போராட்டம் வெடித்த நிலையில் கர்நாடகாவில் கம்பலாவுக்கு ஆதரவாக குரல்கள் எழும்பின. இந்தநிலையில் பாரம்பரியமாக கம்பலா நடைபெறும் மங்களூர் பகுதியில் நேற்று முன்தினம் மாணவர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். கன்னட பாரம்பரியத்தைக் காக்க கம்பலாவுக்கு மீண்டும் அனுமதி கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் கம்பலா தடைக்கு காரணமான பீட்டாவுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கம்பலா ஆதரவு போராட்டங்களால் கர்நாடகாவின் பல்வேறு இடங்களில் பரபரப்பான சூழல் நிலவுகிறது. பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், அந்த மாநில முதலமைச்சர் சித்தராமையா, கம்பலாவுக்கு அரசு ஆதரவாக இருப்பதாகவும், பீட்டா அமைப்பு நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கியிருப்பதால் நடத்த முடியாத சூழலில் இருப்பதாகக் கூறியுள்ளார். தேவைப்பட்டால் அவசரச் சட்டம் கொண்டுவரப்படும் என்றும் சித்தராமையா தெரிவித்துள்ளார். (எ)

# தமிழர் கலாசாரத்துக்கு பெருமை சேர்த்த ஜனாதிபதி!



டில்லியில் நடந்து முடிந்த குடியரசு தின விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில் மூன்றாவது பரிசு பெற்ற தமிழக அணியின் புகைப்படத்தை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தமது அதிகாரபூர்வ பேஸ்புக் பக்கத்தில் கவர் படமாக வெளியிட்டுச் சிறப்பித்துள்ளார்.

# பரீட்சை வந்து விட்டால் கவலையா? அந்தக் காலத்தை கொண்டாடுங்கள்!

### மாணவர்களுக்கு மோடி அறிவுரை

சென்னை, ஜன.30

மாணவர்கள் பரீட்சை தொடர்பில் கவலைப்பட வேண்டாம். அது கொண்டாடப்படவேண்டிய காலம். - என்று பிரதமர் மோடி வானொலி உரையில் தெரிவித்தார்.

பிரதமர் மோடி மாதந் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் வானொலியில் மன்கிபாத் (மனதின் குரல்) என்ற தலைப்பில் உரையாற்றி வருகிறார். நேற்று வானொலியில் அவர் 28 ஆவது முறையாக உரையாற்றினார். இதன் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு;

"மாணவர்கள் பரீட்சை தொடர்பில் கவலைப்பட வேண்டாம். அது கொண்டாடப்படவேண்டிய காலம். பரீட்சைக் காலத்தை கொண் டாட்ட தருணமாகக் கருத வேண்டும். விளையாட்டுடன் இணைந்த கல்வியாக இருக்க வேண்டும். எப்போதும் புன் சிரிப்புடன் மேலும் மேலும் முன் னேற்றத்தை எட்ட வேண்டும்.

"பரீட்சைகளில் மறு சீரமைப்புத் தேவை. பரீட்சைகளின் போது மேசைகளில் மதிப்பெண்கள் மட்டுமே போடுவது என்று இருக்கக்கூடாது. அறிவு பூர்வமான கல்வியாக இருக்கவேண்டும். ஒரு வருக்கொருவர் போட்டி போட வேண்டும். எதிர்பார்ப்புகள் தான் பிரச்சினை. மாமனிதர் அப்துல்கலாமின் சாதனைகளை நினைவில் கொள்ளவேண்டும்.

"கடினமாக உழைத்து புதிய கண்டு பிடிப்புகளை உருவாக்க வேண்டும். மதிப் பெண்களுக்காகப் படிக்கக் கூடாது, அறிவை வளர்க்க கல்வியை பயன்படுத்த வேண்டும்."- என்றார். (எ)

## 31 பேருடன் பயணித்த மலேசியப் படகு மாயம்

கோலாலம்பூர், ஜன.30

சுற்றுலாப் பயணிகள் 28 பேர் உட்பட 31 பேருடன் பயணித்த மலேசியப் படகு ஒன்று காணாமற் போய் உள்ளதாக அந்த நாட்டு கரையோர காவல் படையினர் தெரிவித்துள்ளனர்.


சீன புதுவருடத்தைக் கொண்டாடும் நோக்கில் மலேஷிய கிழக்கு கடற் பிராந்தியத்தில் உள்ள சபா சுற்றுலாத் தளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையில், படகுடனான தொடர்பு செயலற்றுப் போனது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை காணாமற்போன இந்தப் படகைத் தேடும் பணிகள் தற்போது முனைப்புடன் இடம் பெறுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அந்தக் கடற் பிராந்தியத்தில் அடிக்கடி கடல் கொந்தளிப்புடனான புயல் காற்று வீசும் எனவும் என எச்சரிக்கப்பட்டிருந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# அகதிகள் நுழைய ட்ரம்ப் தடை! அந்த உத்தரவுக்கு நீதிமன்று தடை!

## விசாவுடன் வருவோரை ஏற்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்பு



வொஷிங்டன், ஜன.30

அமெரிக்காவுக்குள் அகதிகள் நுழையத் தடை விதித்த ஜனாதிபதி ட்ரம்பின் உத்தரவுக்கு தற்காலிகத் தடை விதித்த நியூயோர்க் நீதிமன்றம், விசாவுடன் அமெரிக்காவுக்கு வரும் அகதிகளை ஏற்றுக் கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக சமீபத்தில் பதவி ஏற்ற நாள் முதல் டொனால்ட் ட்ரம்ப் அதிரடி நடவடிக்கையாக எந்தவொரு நாட்டில் இருந்தும் அகதிகள் அமெரிக்காவுக்குள் வர 4 மாத கால தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

உள்நாட்டுப்போரில் சின்னாபின்னமாகிவிட்ட சிரியாவில் இருந்து அகதிகள் அமெரிக்காவுக்குச் செல்ல கால வரையற்ற தடை விதித்த ட்ரம்ப், ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், ஏமன் ஆகிய 7 நாடுகளை சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவதை 3 மாதங்களுக்கு நிறுத்தி வைத்து உத்தரவிட் டார். இந்த நாடுகளைப் பொறுத்தமட்டில் தூதரக ரீதியிலான 'ராஜ்ய விசா' மட்டும் தொடர்ந்து வழங்கப்படும். ஆனால் தனி நபர்களுக்கு விசா வழங்கப்படாது.


ட்ரம்பின் அதிரடி உத்தரவுகள் அமெரிக்க மக்கள், மற்றும் உலக நாடுகள் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ட்ரம்ப் தடை விதித்த 7 நாடுகளில் இருந்து முறையாக விசா பெற்று அமெரிக்காவுக்குள் பிரவேசிக்க இருந்த பயணிகளையும் பெரிதும் பாதித்தது. இதற் கிடையே அமெரிக்காவில் ட்ரம்ப் உத்தரவுக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தத் தொடங்கினர். மேற்குகூறிய நாடுகளில் இருந்து வந்த பயணிகள் விமான நிலையங்களில் தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவமும் அரங்கேறியது. இவ்வாறு சுமார் 100 இற்கும் மேற்பட்ட பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

ட்ரம்பின் அதிரடி உத்தரவு தொடர்பான விவகாரம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் கிழக்கு மாவட்ட நீதிமன்றத்துக்குச் சென்றது. இது தொடர்பாக விசாரணை நடத்திய நீதிபதி அன்டொனேலே டொனால்ட் ட்ரம்பின் தடை உத்தரவை நிறுத்தி உத்தரவு பிறப்பித்தார்.

இதனையடுத்து அமெரிக்காவில் பயணிகள் தரையிறங்க அனுமதி கிடைத்துள்ளது. அமெரிக்க விமான நிலையங்களில் சிக்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் மற்றும் அகதிகளைவெளியேற்றும் பணியை நிறுத்துமாறு அமெரிக்க அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

## பிரிட்டன்-துருக்கி இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்து



லண்டன், ஜன.30

பிரிட்டன் பிரதமர் தெரேசா மே மற்றும் துருக்கி ஜனாதிபதி ரெசிப் தயிப் எர்துவான் ஆகிய இருவரும், பாதுகாப்புத் துறை தொடர்பில் 125 மில்லியன் டொலர் ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டுள்ளனர்.

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகத் தயாராகி வருவதால், துருக்கியின் போர் விமான பலத்தை அதிகரிக்க செய்யும் இந்த ஒப்பந்தம் பல பில்லியன் டொலர் ஒப்பந்தங்களுக்கு வழிவகுக்கும் என்றுமேவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம், துருக்கியில் தோல்வியில் முடிந்த இராணுவ அதிரடிப்புரட்சியின் போது, துருக்கிக்கு பிரிட்டனின் ஆதரவு இருந்ததைச் சுட்டிக்காட்டிய மே, சட்டத்தின் ஆட்சியைப் பராமரிப்பது மற்றும் மனித உரிமைகளுக்கான கடப்பாடுகளை ஆதரித்து ஜனநாயகத்தை நிலைநிறுத்துவது துருக்கிக்கு முக்கியம் என்றார். (எ)

## புகலிடக்கோரிக்கையாளர் இணக்கப்பாடு ரத்தாகும்!

### எச்சரிக்கிறது துருக்கி

கிரேக்கர்களின் புகலிடக் கோரிக்கையாளர் தொடர்பிலான இணக்கப்பாட்டை ரத்து செய்ய நேரிடும் என்று துருக்கி கிரேக்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இராணுவ சதிப் புரட்சி முயற் சியுடன் தொடர்புடைய 8 படை வீரர்கள் கிரேக்கத்துக்குத் தப்பிச் சென்றுள்ளனர். இவ்வாறு தப்பிச் சென்றுள்ள துருக்கி படையினரை மீளவும் ஒப்ப டைக்குமாறும் கோரிக்கைவிடுத்துள்ளது.

அந்தப் படையினரை நாடு கடத்துமாறு துருக்கி விடுத்த கோரிக்கையை கிரேக்க நீதி மன்றம் நிராகரித்துள்ளது. கோரிக்கை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் புகலிடக் கோரிக்கையாளர் குறித்து ஏற்படுத்திக் கொண்டுள்ள இணக்கப்பாட்டை ரத்து செய்யப்போவதாகவும் வேறு கடுமையான நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்றும் துருக்கி எச்சரிக்கை விடுத்துள்ளது. (எ)

## துருக்கியில் பணி நீக்கிய இராணுவத்தினர் ஜேர்மனியிடம் கோருகின்றனர் தஞ்சம்!



பேர்ளின், ஜன.30


துருக்கியில் புரட்சியில் ஈடுபட்டு பணி நீக்கம் செய்யப்பட்ட இராணுவ வீரர்கள் 40 பேர் ஜேர்மனியில் தஞ்சம் கேட்டு மனு செய்துள்ளனர். அவர்கள் அனைவரும் 'நேட்டோ' படைப் பிரிவில் பணியாற்றியவர்கள். ஆனால் அவர்களுக்கு தஞ்சம் அளிப்பது குறித்து, ஜேர்மன் அரசும் நேட்டோ அதிகாரிகளும் எந்தக் கருத்தும் வெளியிடவில்லை.

துருக்கியில் கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதி ரீசெப் தயீப் எர்டோகனுக்கு எதிராக இராணுவப் புரட்சி இடம்பெற்றது. ஆனால் அது பொதுமக்கள் உதவியுடன் முறியடிக்கப்பட்டது. அதனையடுத்து புரட்சியில் ஈடுபட்ட இராணுவ வீரர்கள், பொலிஸார் மற்றும் பல துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். பதவி நீக்கமும் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கல் விரைவில் துருக்கி செல்ல உள்ளார். அப்போது இந்த விவகாரம் குறித்து துருக்கி அதிபர் எர்டோகனுடன் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# தீவிரவாதத்தை ஒடுக்குவதில் இணைந்து செயற்படத் தயார்

## முதன்முறையாக புடின்—ட்ரம்ப் தொலைபேசி உரையாடலில் தெரிவிப்பு



மொஸ்கோ, ஜன.30

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றபின் முதன்முறையாக ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் தொலைபேசியில் பேசினார் ட்ரம்ப்.

இதன்போது சர்வதேச தீவிரவாதத்தை ஒடுக் குவதில் ஒன்றுபட்டுச் செயற்பட இரு நாட்டுத் தலைவர்களும் முடிவு செய்துள்ளனர்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகக் கடந்த 20 ஆம் திகதி டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்றார். அதைத் தொடர்ந்து ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா நாட்டு தலைவர்களுடன் தொலைபேசியில் பேசினார்.

சமீபத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியுடனும் தொலைபேசியில் பேசினார். அப்போது இந்தியா அமெரிக்காவின் உண்மையான நண்பன் எனப் புகழாரம் சூட்டினார்.

இந்தநிலையில் பதவி ஏற்றபின் முதன் முறையாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் நேற்றுமுன்தினம் தொலைபேசியில் பேசினார். இத்தகவலை ரஷ்ய ஜனாதிபதியின் கிரம்ளின் மாளிகை தெரிவித்துள்ளது.

அந்தத் தகவலில், அப்போது அமெரிக்கா - ரஷ்யா ஆகிய 2 நாடுகளும் சர்வதேச தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடுவது என்றும் குறிப்பாக சிரியாவில் ஆதிக்கம் செலுத்தும் ஐ.எஸ். தீவிரவாதிகள் மற்றும் சில தீவிரவாத அமைப்புகளை அடக்கி ஒடுக்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இந்தப் பேச்சு ஆக்கப்பூர்வமாக இருந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மத்திய கிழக்கு, அரபு மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு இடையேயான பிரச்சினை, ஈரான் அணு ஆயுதத் திட்டம், வடக்கு மற்றும் தென்கொரியா பிரச்சினைகள் மற்றும் உக்ரைனின் தற்போதைய நிலை குறித்தும் விவாதித்தனர்.

முக்கியமாக சர்வதேச தீவிரவாதத்தை ஒடுக்குவ தில் ஒன்றுபட்டுச் செயற்பட இரு நாட்டுத் தலைவர்களும் முடிவு செய்துள்ளனர்.





மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி முதல்வர் எம்.இந்திரபாலா தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வெற்றி பெற்ற அணிக்கு பிரதம விருந்தினர் வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (ஐ-54)





தென்மராட்சி கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற போது... (ஐ-21)




வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா, சமூக அபிவிருத்திப் பணிகளை விருத்தி செய்யும் நோக்கில் 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண ஒதுக்கீட்டு நிதியில் இருந்து கொக்குவில் தலையாழி இந்திரா சனசமூக நிலையத்தின் புனரமைப்புப் பணிகளுக்கான காசோலையை அண்மையில் சனசமூக நிலைய நிர்வாகத்திடம் வழங்கினார். (ஐ-21)






யாழ்.வை.எம்.எம்.ஏ. நிறுவனத்தினர் கொழும்பு வை.எம்.எம்.ஏயின் அனுசரணையில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி, கதீஜா மகளிர் கல்லூரி, சின்னப்பள்ளி வாசல் ஜே/ 186 முதியோர் சங்கம், யாழ். மன்ப உல் உலூம் முன்பள்ளி என்பவற்றுக்குத் தளபாடங்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கினர். (ஐ-19)






அராலி மாவத்தை விளையாட்டுக் கழக உழவர் விழா அண்மையில் கழக மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தனும் சிறப்பு விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும் கலந்து கொண்டனர். (ஐ-21)



அல்வாய் கண்ணகி அம்மன் ஆலய இரதோற்சவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ஐ-21)



மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆண்டான்குளம் ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் 2016 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 06 மாணவர்களுக்கு, அவர்களை மேலும் ஊக்குவிக்கும் நோக்கோடு வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் சைக்கிள்களை வழங்கியுள்ளார். (ஐ)

# யாழ். இந்துக் கல்லூரியின் மரதன் ஓட்டம்






யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளின் முதல் நிகழ்வான மரதன் ஓட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை காலையில் கல்லூரி மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி நடைபெற்றது. இப் போட்டியில் பங்குபற்றிய வீரர்களையும், முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரர்களையும் படங்களில் காணலாம். வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி இரண்டாம் வாரத்தில் நடைபெறவுள்ளது.

## 19 வயதுக்கு உட்பட்ட முக்கோண கிரிக்கெட்; இலங்கை அணி சம்பியன்



தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 19 வயதுக் குட்பட்ட அணிகளுக்கான முக்கோண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட இலங்கை கிரிக்கெட் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித் துள்ளது.

தென்னாபிரிக்கா, இலங்கை மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடு களின் 19 வயதுக்கு உட் பட்ட அணிகள் இப் போட்டியில் கலந்து கொண்டன.

இந்த முக்கோணச் சுற்றின் இறுதிப் போட்டி தென்னாபிரிக்க அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி சகல விக்கெட் டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 79 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் நிபுன் ரன்சிக 19 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக் கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவர் இந்த முக்கோணச் சுற்றில் மொத்தமாக 17 விக்கெட் டுக்களை கைப்பற்றி யுள்ளார். இறுதிப் போட்டியினதும், சுற்றினதும் சிறந்த பந்து வீச்சாளராக இவர் தெரிவு செய்யப்பட்டார். (ஒ)

# வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில்...




தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள் கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத் தலைவர் திருமதி கமலாதேவி முருகானந்தம் (சமூக சேவையாளர் மற்றும் சிறுநீர் நோய்க்கான ஆற்றுப்படுத்துநர் பிரான்ஸ்), சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோசலை குணபாலசிங்கம், கௌரவ விருந்தினராக கிராம உத்தியோகத்தர் கார்த்திகேசு துவாரகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (54)

## சென். ஜோன்ஸ் கல்லூரியில்...




சென். ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள் அண்மையில் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றன. இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கலந்து சிறப்பித்தார். (21)

## முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில்...




முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப்போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு கல்வி வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தட்சாயினி வசிகரன், கரைதுறைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.சிறிபுஸ்பநாதன், முல்லைத்தீவுக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மைக்கேல் திலகராசா, முல்லைத்தீவுக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சத்தியசீலன், முல்லைத்தீவு கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவசுப்பிரமணியம், முல்லைத்தீவுக் கல்வி வலய முறைசாரா கல்வி வலயப்பிரதிநிதி சி.சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (81)

# 2 ஆவது ரி - 20 இல் வென்றது இந்தியா



இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நாக்பூரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ரி-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்தது.

இந்திய அணியின் தொடக்க வீரர்களாக அணித் தலைவர் ஹோக்லி மற்றும் ராகுல் ஆகியோர் களமிறங்கினர்.

15 பந்துகளில் 1 சிக்ஸர், 2 பவுண்டரிகள் அடங்கலாக 21 ஓட்டங்களைப் பெற்ற ஹோக்லி, ஜோர்டனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

றெய்னா 7 ஓட்டங்களில் றசீடின் பந்தில் வெளியேறினார்.

யுவராஜ் சிங் 4 ஓட்டங்களுடன் அலிஸின் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார்.

ராகுல் 47 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜோர்டனின் பந்துக்கு இலக்கானார்.

பண்டே 26 பந்துகளில் 30 ஓட்டங்களை எடுத்து மில்ஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

பண்ட்யா 2 ஓட்டங்களுடனும், மிஸ்னா ஓட்டங்கள் எவற்றையும் பெறாமலும், டோனி 5 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களை எடுத்தது.

பந்து வீச்சில் ஜோர்டன் 3 விக்கெட்டுக்களையும், மில்ஸ், அலி, றசிட் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

145 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் இங்கிலாந்து அணியின் றோய் மற்றும் பிலிங்ஸ் ஆகியோர் களமிறங்கினர்.

பிலிங்ஸ் 9 பந்துகளுக்கு 12 ஓட்டங்களை எடுத்து நெஹ்ராவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

றோய் 11 பந்துகளில் 10 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நெஹ்ராவின் பந்துக்கு இலக்கானார்.

அணித் தலைவர் மோர்கன் 17 ஓட்டங்களைப் பெற்று மிஸ்ராவின் பந்துக்கு பண்ட்யாவிடம் பிடிகொடுத்தார்.

ஸ்டோக்ஸ் 27 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்று தெஹ்ராவின் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார்.

ரூட் 38 பந்துகளில் 38 ஓட்டங்களை எடுத்து பும்ராவின் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார்.

பட்லர் 10 பந்துகளில் 1 சிக்ஸர், 1 பவுண்டரி அடங்கலாக 15 ஓட்டங்களைப் பெற்று பும்ராவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 139 ஓட்டங்களைப் பெற்று 5 ஓட்டங்களால் இந்தியாவிடம் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் நெஹ்ரா 3 விக்கெட்டுக்களையும், பும்ரா 2 விக்கெட்டுக்கைளயும் , மிஸபுரா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் பும்ரா தெரிவாகினார்.

முதலாவது ரி-20 போட்டியில் இங்கிலாந்து வென்றது என்பது குறிப்பிடத்தக்கது.





## 205 நாடுகளுக்கு மத்தியில்

# இலங்கைக்கு 196 ஆவது இடம் உதைபந்தாட்ட தர வரிசையில்!

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளமான பீபா (FIFA) உலக நாடுகளின் உதைபந்தாட்டத் தர வரிசையை வெளியிட்டிருக்கின்றது.

அதன்படி, 205 நாடுகளின் பட்டியலில் 196 ஆவது இடத்தை இலங்கை பெற்றுள்ளது. அதற்கு அடுத்த நிலையில் 157 ஆவது இடத்தில் பாகிஸ்தான் உள்ளது.

அதற்குப் பின்னர் முறையே மொங்கோலியா, மொன்சிரட், கெய்மன் தீவுகள், தேர்க்ஸ் மற்றும் லிகக்கொஸ் தீவுகள், சன் மரீனா, அண்ட்ரோ, பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகள், அங்கியூலா, டிபோஜி, எரித்திரியா, ஜிப்ரோல்டர், சோமாலியா, ரொங்கோ ஆகிய நாடுகள் உள்ளன.

கடந்த வருடம் 195 ஆவது இடத்திலிருந்த இலங்கை புதிய தரப்படுத்தலின்போது மேலும் ஓர் இடம் தரம் இறங்கி 196 ஆவது இடத்துக்கு வந்துள்ளது.

கடந்த தரப்படுத்தலின்போது 135 ஆவது இடத்திலிருந்த இந்தியா ஆறு இடங்கள் முன்னேறி இப்போது 129 ஆவது இடத்துக்கு வந்துள்ளது.

தரப்படுத்தலில் முன்னிலையில் முறையே ஆர்ஜென் ரீனா, பிரேஸில், ஜேர்மனி, சிலி, பெல்ஜியம், கொலம் பியா, பிரான்ஸ், போர்த்துக் கல், உருகுவே, ஸ்பெயின், சுவிட்ஸர்லாந்து, வேல்ஸ், இங்கிலாந்து, குரோ ஷியா,போலந்து, இத்தாலி ஆகியன உள்ளன. (உ)

## எனக்கு இது கடினமான தருணம்

### உசைன் போல்ட் உருக்கம்



சக வீரர் ஊக்க மருந்து சோதனையில் சிக்கியதால் உலகின் மின்னல் வீரர் உசைன் போல்ட் பீஜிங் தங்கத்தை ஒலிம்பிக் சங்கத் திடம் திருப்பிக் கொடுத்துள் ளார்.

2008ஆம் ஆண்டு சீனா வின் பீஜிங்கில் நடந்த ஒலிம் பிக் போட்டியில் ஆண்கள் 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் ஜமைக்கா அணி தங்கம் வென்றது. இதில் ஜமைக்கா வீரர்களில் ஒருவ ரான் கார்டர் சமீபத்தில் நடந்த ஊக்கமருந்து சோதனையில் தோல்வியடைந்தார்.

இதனால் ஜமைக்கா அணியின் வெற்றி பறிபோனது. இதையடுத்து அந்த வெற்றிப் பதக்கத்தைத் திருப்பியளிக்க வேண்டும் என ஒலிம்பிக் சங்கம் உத்தரவிட்டது.

இதனால் உசைன் போல்ட் தனது பதக்கத்தை ஒலிம்பிக் சங்கத்திடம் திருப்பி அளித்தார்.

தற்போது போல்ட் வசம் 8 தங்கப் பதக்கங்களே உள்ளன. பதக்கத்தைத் திருப்பியளித்தது குறித்து உசைன் போல்ட் கூறுகையில், 'தங்கப் பதக்கங்களில் ஒன்றைத் திருப்பிக் கொடுத்தது கஷ்டமானதாக இருந்தது. இருப்பினும் ஒலிம்பிக் சங்கத்தின் முடிவை மதிப்பது எனது கடமை என்பதால் பதக்கத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டேன்.' - என்றார். (ஒ)

# கிண்ணத்தை வென்றார் பெடரர்



ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் கிண்ணத்தை வென்று 18ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றினார்.

ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடந்தது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் தரவரிசையில் 9ஆவது இடத்தி லுள்ள ஸ்பெயினின் நடால், 17ஆவது இடத்திலுள்ள சுவிட்சர்லாந்தின் பெடரரைச் சந்தித்தார். முதல் செட்டை பெடரர் 6-4 என கைப்பற்றினார். இதற்கு அடுத்த செட்டை 6-3 என வென்று நடால் பதிலடி கொடுத்தார். தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய பெடரர் மூன்றாவது செட்டை 6-1 என தன்வசப்படுத்தினார்.

தனது ஆக்ரோ ஆட்டத்தால் நான்காவது செட்டை நடால் 6-3 என வென்று காட்டினார். இதனால் வெற்றியாளரை நிர்ணயிக்கும் ஐந்தாவது செட்டில் விறுவிறுப்பு அதி கரித்தது. இதில் துடிப்பாகச் செயற்பட்ட பெடரர் 6-3 என செட்டை தன்வசப்படுத்தினார். முடிவில் பெடரர் 6-4, 3-6, 6-1, 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதன் மூலம் 18ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று 5ஆவது முறையாக ஆஸ்திரேலிய ஓபனில் கிணணத்தைக் கைப்பற்றினார். (ஒ)

# யாழில் நிரந்தரமாக வசிக்காதவர்களுக்கு வீடுகள் வழங்கினால் போராட்டம் வெடிக்கும்

## வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணத்தில் நிரந்தர வசிப்பிடங்களைக் கொண்டிருக்காத 257 சிங்களக் குடும்பங்களுக்கு நாவற்குழியில் வீடுகளை அமைப்பதற்கு யாழ்.அரசாங்க அதிபர் முயற்சித்தால் அவருக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடிக்கும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரித்துள்ளார்.

மேற்படி குடும்பங்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு இன்று திங்கட்கிழமை காலை வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சஜித் பிரேமதாசா அடிக்கல் நாட்டவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே சிவாஜிலிங்கத்தின் இந்த எச்சரிக்கை அறிவிப்பு வெளியாகியுள்ளது.

யுத்தத்திற்கு முன்னர் தாங்கள் யாழ்ப்பாணத்தில் வசித்தார்கள் என்றும் தமது இடங்களை இப்போது தமிழ் மக்கள் ஆக்கிரமித்துவிட்டனர் என்றும் கூறிய ஒரு தொகுதிச் சிங்களக் குடும்பங்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணம் வருகை தந்து யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியிருந்தனர்.

சில தினங்களின் பின்னர் அவர்கள் இராணுவத்தினர் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்களின் துணையுடன் நாவற்குழிக்குச் சென்று, ஏற்கனவே தமிழ்மக்கள்வசித்துவந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் காணிகளில் கொட்டில்களை அமைத்துக் குடியேறினர்.



அந்த விடயம் அப்போது அரசியல் பேசுபொருளாக இருந்து பின்னர் இல்லாமல் போனது. தற்போது அவர்களுக்கு அந்த இடத்தில் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மீண்டும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

இது தொடர்பாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவிக்கையில் –

நாவற்குழியில் சிங்கள மக்களுக்குநிரந்தரவீடுகளை அமைத்துக் கொடுக்கும்போது ஏனைய பிரதேசங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகள்பின்பற்றப்படுமா என்பதை யாழ்.அரச அதிபர் தெளிவுபடுத்த வேண்டும்.

நாவற்குழியில்குடியேறியுள்ள சிங்களக்குடும்பங்கள் உண்மையிலேயே முன்னர் இங்கு இருந்தவர்கள் தானா?, அவர்களின் பெயர், விவரங்கள் வாக்காளர் இடாப்பில் உள்ளனவா? போன்ற விடயங்கள்பார்க்கப்படவேண்டும் என்பதையே நாங்கள் கோருகின்றோம்.

இன்றைய அடிக்கல் நாட்டும் நிகழ்வுக்கு முன்னர் மேற்படி விடயங்கள் தொடர்பாக அந்த இடத்தில்வைத்தாயினும்தெளிவு படுத்த வேண்டும். இல்லையேல் அடிக்கல் நாட்ட அனுமதிக்க மாட்டோம். மக்களைத் திரட்டிப் போராடுவோம். – என்றார். (ம-09)

### இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் தலைவர் பேராசிரியர் யுவான் மெந்தெஸ், ஐ.நாமனித உரிமைகள் கவுன்சிலின் எதிர்வரும் மார்ச் மாத அமர்வில் இலங்கை தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கையின் நீதிமன்றம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸார் உட்பட சட்டம், ஒழுங்கைநிலைநாட்டும்அனைத்துத் தரப்புகளும் அந்த அறிக்கையில் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தன.

இந்த அறிக்கைக்குப் பதில் அறிக்கை மார்ச் மாத ஜெனீவா அமர்வில் தாக்கல் செய்யப்படும் என வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மெந்தஸின் அறிக்கையை நிராகரித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் எந்தவிதமான சான்றுகளும் இல்லாமல் தனி நபர்களின் வாக்கு மூலங்களின் அடிப்படையில் இது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் இந்த அறிக்கையின் எந்தவொரு பரிந்துரைக்கும் இணங்க முடியாது என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

இந்த அறிக்கையில் பொலிஸாரின் சித்திரவதைகளே பிரதானமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவ்வாறு பொலிஸாரினால் எவரேனும் சித்திரவதை செய்யப்பட்டிருந்தால் அந்த நபர் நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்படும் போது அது தொடர்பில் முறையிட முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் எவரேனும் அவ்வாறு செய்யவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி மேலும் கூறியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் பெப்ரவரி 27 ஆம் திகதியிலிருந்து மார்ச் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் 34 ஆவது அமர்வில் ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் அறிக்கை தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளது. (ஒ)

### லசந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அதன் பின்னர் அந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக சில விடயங்களைத் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருக்கின்றார்.

இந்தப் படுகொலைக்கும் தமக்கும் தொடர்பு ஏதுமில்லை என்றுதிட்டவட்டமாகத்தெரிவித்த அவர், இவ்விடயத்தில் குற்றச்சாட்டுவிரலை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அச்சமயம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த அவரவது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை நோக்கி நீட்டும் விதத்தில் வெளிப்படையாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இந்த விடயங்களைக் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுதனது நேற்றைய இதழில் விலாவாரியாக ஆராய்ந்திருக்கின்றது.

லஸந்த விக்கிரமதுங்கவுக்கும், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கும் இடையில் இருந்த உறவு நிலை விவரங்கள், ஊடாட்டங்கள், 'மிக்' விமானக் கொள்வனவில் கோட்டாபய சுருட்டியவை எனக் கூறப்படும் நிதி மோசடிகளை அம்பலப்படுத்த லஸந்த எடுத்த நடவடிக்கைகள், அதை நீதிமன்றம் மூலமும் பிற வழிகளிலும் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட எத்தனங்கள், லஸந்த விக்கிரமதுங்கவைக் கொல்வதற்கான தீர்மானத்தை எடுத்ததற்குக் காரணமாக இருந்திருக்கக் கூடிய நோக்கங்கள், கொலைச் சம்பவத்துக்கு முன்னர் அது குறித்து ஊகித்து லஸந்த விக்கிரமதுங்க பரிமாறிய கருத்துகள் பற்றி எல்லாம் அந்தக் கட்டுரை விரிவாக ஆராய்ந்திருக்கின்றது.

"இந்தப் படுகொலையின் உண்மையான சூத்திரதாரி, முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாதான் என்றால், 2010 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஜவை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த பொன்சேகாவையும் அவருக்கு ஆதரவான படையினரையும் கூண்டோடு வளைத்துப் போட்டு, சிறையில் அடைத்து, ஒன்றுமில்லா விடயங்களுக்கு எல்லாம் வழக்கும் போட்டுத் தண்டனையும் வாங்கிக் கொடுத்து, அதற்காக சிறையிலும் அடைத்த மஹிந்த – கோட்டா கூட்டு, லஸந்த விக்கிரமதுங்க கொலை விடயத்தைச் சும்மா விட்டு வைத்திருக்குமா? அந்தவிடயத்தையும் விசாரித்து, அதற்காக ஒரு மரணதண்டனை அவருக்கு வாங்கித் தந்திருக்காதா? தாங்கள் நேரடியாகச் சம்பந்தப்பட்டமையால்தான் அவர்கள் (மஹிந்த – கோட்டா அணி) இது விடயத்தில் ஒன்றும் செய்யாமல் பம்மிக்கொண்டிருந்தது." – என சரத்பொன்சேகாவின் முன்னாள் சாரதி ஒருவர் தெரிவித்தார் என்ற சாரப்பட முத்தாய்ப்புக் கருத்துடன் அந்தக் கட்டுரை பூர்த்தியாகியிருந்தது. (உ)

### 'மிக்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் இடம்பெற்ற 'மிக்' விமானக் கொள்வனவு ஊழல் தொடர்பில் செய்தி வெளியிட்டமையாலேயே ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க சுட்டுக்கொல்லப்பட்டார். கோட்டாபய தலைமையிலான மிக் ஊழல்வாதிகள் தான் இந்தக் கொலையைச் செய்திருக்கின்றனர். இவர்கள் மாத்திரமன்றி மஹிந்த ஆட்சியில் ஊழல் புரிந்த, மற்றும் கொலைகள் செய்த அனைவரும் தண்டிக்கப்படவேண்டும்.

மஹிந்த ஆட்சியில் கோடிக்கணக்கில் இடம்பெற்ற திருட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காகவே நிதி மோசடி விசாரணைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் அந்தப் பிரிவு ஒரு லட்சம் ரூபா, இரண்டு லட்சம் ரூபா தொடர்பான மோசடிகளையே விசாரித்து வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டுபாய் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ள கோடிக்கணக்கான ரூபா கறுப்புப் பணம், மிக் கொள்வனவு மோசடி போன்றவை தொடர்பில் விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். மிக் கொள்வனவு மோசடி தொடர்பில் எழுதியமைக்காகவே லசந்த சுட்டுக்கொல்லப்பட்டார் எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார். (ஒ)

## கல்வியங்காட்டில் உள்ள வீடொன்றில் கொள்ளையிடும் முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம் – கல்வியங்காடு பூதவராயர் கோயிலடியில் உள்ள வீடொன்றில் கொள்ளையிடச் சென்றவர்கள் வீட்டுக் கதவைத் திறக்க முடியாமல் போனதால் தமது முயற்சியைக் கைவிட்டுத் தப்பிச்சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

வீட்டில் இருந்தவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது அங்கு சென்ற சிலர் கதவில் தட்டி அவர்களை எழுப்பி கதவைத் திறக்குமாறு கூறினர். அதன்போது அச்சம் காரணமாக அவர்கள் கதவைத் திறக்கவில்லை.

அதனால், கொள்ளையர்கள் தாம் கொண்டு சென்ற கூரிய ஆயுதம் ஒன்றினால் கதவைத் கொத்தித் திறக்க முற்பட்டனர். அதன்போது வீட்டிலுள்ளோர் அவலக் குரல் எழுப்பினர். இதனால் தமது முயற்சியைக் கைவிட்ட கொள்ளையர்கள் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டமையுடன் கைவிரல் தடயங்களையும் பதிவு செய்து சென்றனர். (ம-09)

## மது போதையில் சென்ற கும்பல் மோ.சைக்கிளைச் சேதப்படுத்தியது

யாழ்ப்பாணம் – வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு முன்பான நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மது போதையில் சென்ற இளைஞர்களால் கொத்திச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ். லோட்டஸ் வீதியைச் சேர்ந்த இளைஞரின் மோட்டார் சைக்கிளே சேதப்படுத்தப்பட்டது.

3 மோட்டார் சைக்கிளில் சென்ற 9 பேர் கூரிய ஆயுதம் ஒன்றினால் மோட்டார் சைக்கிளைக் கொத்திச் சேதப்படுத்தினர் எனக் கூறப் படுகின்றது.

இது தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-09)

## இலசவ மருத்துவ முகாம்

முல்லைத்தீவில் மருத்துவ சேவையை மேம்படுத்தும் நோக்கோடு உதயமாகிய முல்லை மருத்துவ சங்கத்தால் நேற்று தேவிபுரம் ஆரம்ப வைத்திய சாலையில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் முல்லை மருத்துவ சங்கத்தின் போசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் சி.சிவமோகன், மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுதர்சன் மற்றும் விசேட வைத்திய நிபுணர்கள் ஏழு பேருடன் 20 க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் கலந்துகொண்டு மருத்துவ சேவை வழங்கியிருந்தனர்.

இதில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த பல கிராமங்களில் இருந்து மக்கள் கலந்து பயன் பெற்றனர். (ம -81)

### மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவி வகித்து வரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கடந்த ஊழல் அரசாங்கத்தில் அமைச்சர்களாகப் பதவி வகித்தவர்கள்.

அமைச்சர்களாகப் பதவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் சிலர் இதற்கு முன்னர் அமைச்சர்களாக பதவி வகித்தவர்கள் அல்லர். அரசாங்கத்தின் மந்தகதியான பயணத்துக்கு இதுவும் ஒரு காரணம்' எனவும் அவர் கூறினார்.

அந்த நேர்காணலில் அவர் தெரிவித்துள்ள மேலும் சில முக்கியமான விடயங்கள் வருமாறு,

**கேள்வி**: நல்லாட்சி அரசாங்கத் தின் இரண்டு தரப்பையும் சேர்ந்த அமைச்சர்கள் ஒருவருக்கு ஒருவர் விமர்சித்து கொள் ளும் நிலைமை காணப்படு கிறதே!

**சந்திரிகா**: இதனை தான் நான் முன்னரும் கூறினேன். கடந்த 9 ஆண்டுகளாக ஒன்றாக திருடிச் சாப்பிட்டவர்கள் இருக்கின்றனர். கொள்ளையிட வேண்டும் என்ற தேவை காரணமாக பழைய அரசாங்கத்தை அவர்கள் ஆட்சிக்கு கொண்டு வர முயற்சிக்கலாம்.

கட்சி என்ற வகையில் நாங்கள் இவ்வாறான விடயங்கள் குறித்து தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். நல்லாட்சி என்பது இவர்களுக்கு, சாரைப் பாம்பின் மீது மண்ணெண்ணெய் பட்டது போல் உள்ளது.

**கேள்வி**: ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது பற்றியும் பேசப்பட்டது. வண.மாதுளுவாவே சோபித தேரரின் இறுதிச் சடங்கின் போது ஜனாதிபதி வாக்குறுதியளித்தார். எனினும் இந்த விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கியதேசியக்கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இது பற்றிய உங்களது நிலைப்பாடு என்ன?.

**சந்திரிகா**: கட்டாயம் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும். அதில் இருவேறு கருத்துக்கள் கிடையாது. இது இந்த அரசாங்கத்தை சீர்குலைக்கக் கனவு காணும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவுடன் இருக்கும் நபர்கள் ஏற்படுத்தும் பிரச்சினை இது.

**கேள்வி**: மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கூறினார்.

எனினும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அவரே வேட்பாளராக போட்டியிடுவார் என அவருக்கு நெருக்கமான அமைச்சர்கள் சிலர் தற்போது கூறுகின்றனர். இது பற்றி உங்களது நிலைப்பாடு என்ன?

**சந்திரிகா**: அமைச்சர்கள் அப்படிக் கூறினாலும் ஜனாதிபதி தாம் போட்டியிடுவார் எனக் கூறவில்லையே. இந்த அமைச்சர்களின் வாய்களை மூட முடியவில்லை என்பதுதான் எனக்குள்ள பிரச்சினை. இவர்களின் வாய்களை மூட வேண்டும். இல்லையேல் விலக்க வேண்டும்.

ஜனநாயகத்தை போன்று கட்சியின் ஒழுக்கத்தையும் பாதுகாக்க வேண்டும். எனினும் மைத்திரி மீண்டும் போட்டியிடுவேன் எனக் கூறவில்லை.

வாக்குறுதியை அவர் மீறுவார் என நான் நினைக்கவில்லை. அவர் எங்கள் அனைவருக்கும் வாக் குறுதி வழங்கினார். மைத்திரி வாக்குறுதிகளை மீறிய அரசியல்வாதி அல்லர். (ம)

காலைக்கதிர்
Kalaikkathir

## காணாமற்போன முதியவர் ஒருவர் அழுகிய நிலையில் சடலமாக மீட்பு

### எழுதுமட்டுவாள் வடக்கில் சம்பவம்

எழுதுமட்டுவாள் வடக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் காணாமற்போன முதியவர் நேற்று நெல் வயலில் இருந்து அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். மிருசுவில் வடக்கைச் சேர்ந்த மா. நடேசபிள்ளை என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

மேற்படி வயோதிபர் காணாமற்போனதில் இருந்து உறவினர்களர் அவரைத் தேடி வந்தனர். அது தொடர்பில் கிராம சேவையாளருக்கு அறிவிக்கப்பட்டதுடன்கொடிகாமம்பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

உறவினர்கள் அவரைப் பற்றைக் காடுகளிலும் தேடிவந்தனர். நேற்றும் தேடுதல் தொடர்ந்தது. இந்த நிலையிலேயே நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் வயல் ஒன்றில் வரம்பிற்கு அருகில் அழுகிய நிலையில் அவரது சடலம் காணப்பட்டது.

இது தொடர்பாக கிராம அலுவலருக்கும் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது. சடலத்தின் கை அருகே புல் வெட்டும் கத்தியும் வரம்பில் உரப்பையும் காணப்பட்டன. இது தொடர்பாக்க் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-23)

### புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் மேலும் கூறுகையில் –

வடக்கில் இந்த விவகாரம் தொடர்பாகக்கைது செய்யப்பட்ட இருவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது எனப் பாதுகாப்புத் தலைமையகத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் நால்வரே இவ்வாறு திட்டம் தீட்டியிருந்தனர் எனவும் இம்மாதம் 13ஆம், 20ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் இவர்கள் சுமந்திரனைக் கொலை செய்ய முற்பட்டு அது சாத்தியப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இருப்பினும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பளிப்பது எமது அமைச்சின் பொறுப்பல்ல. அதனால் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது எனும் போது அது தொடர்பில்பொலிஸார்தான்பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்த வேண்டும். இவ்வாறிருக்கின்ற போது பாதுகாப்புத் தலைமையகத்தின் தரவுகளின் பிரகாரம் யுத்தம் முடிவுற்று 6 வருடங்களுக்கு மேலாகியும் புனர்வாழ்வளிக்கப்படாமல் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் 4000 பேர் உள்ளனர். அவர்களால்தான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் கொலை அச்சுறுத்தல் விடுக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஆனால், அது உண்மைக்குப் புறம்பான விடயம். அவ்வாறு வெளியாகும் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது. புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் இந்த விவகாரத்தில்தொடர்புபடவில்லைஎன்பதே எமது நிலைப்பாடாகும். அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள் எனப் பாதுகாப்புத் தலைமையகத்துக்கு தற்போது வரையில் தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. எவ்வாறாயினும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பில் பொலிஸார் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும். – என்றார். (ஓ)

### மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தனர் எனக் கூறப்படுகின்றது.

மன்னார் சௌத்பார் கிராமத்தைச் சேர்ந்த மீனவரான ஜெஸ்மன் (வயது 49), அவரது இளைய மகனான ஜெ.ஜெக்ஸ்சன் (வயது9) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற ஜெஸ்மின் தன்னோடு மகனையும் அழைத்துச் சென்றார்.

நேற்றுக் காலையாகியும் அவர்கள் வீட்டுக்குத் திரும்பாதமையை அடுத்து உறவினர்கள் ஏனைய மீனவர்களுடன் சேர்ந்து தேடுதல்களை மேற்கொண்டனர். இது தொடர்பாகப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்ட நிலையில், அங்கு சென்று அவர்களும் தேடுதல்களை மேற்கொண்டனர்.

இந்நிலையில், நேற்று மதியம் அவர்கள் இருவரும் கடலில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டனர். சடலங்கள் மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

### புதிதாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக நிறைவடையும் என நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. எனவே, இந்தத் தடங்கல்களை எதிர்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவும் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் சந்திப்பு கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற போதிலும் எந்தவொரு கலந்துரையாடலும் இல்லாமல் அந்தச் சந்திப்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமது முடிவை அறிவிப்பதற்கு மேலதிக கால அவகாசத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் கோரியமையை அடுத்தே வழிகாட்டல் குழுவின் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

புதிய அரசமைப்புப் பணிகள் குறித்துத் தொடர்ந்து நம்பிக்கை வெளியிட்டு வந்த சுமந்திரன் இப்போதுதான் அதில் பின்னடைவு நிலையும், தடங்கலும் ஏற்பட்டிருக்கின்றன என்று ஒப்புக் கொள்ளும் நிலைமை வந்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (உ–ஓ)

### ஊழல் மோசடியில் ஈடுபட்டு

## புலிகளிடமிருந்து உயிரைக் காக்க தப்பி ஓடி வந்தவர்தான் கருணா!

### அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா காட்டம்

கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த போது ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதன் பின்னர், உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தப்பியோடி அரசிடம் வந்தவர் என்று முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்தவெள்ளிக்கிழமைகூட்டு எதிரணி நுகேகொடையில் நடத்திய பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய விநாயகமூர்த்தி முரளிதரன் தற்போதைய அரசை விமர்சித்திருந்தார். இந்த விடயம் தொடர்பில் கண்டியில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களிடம் பேசும்போதே சரத் பொன்சேகா இவ்வாறு கூறியுள்ளார்.

“கருணா என்பவர் புலிகள் இயக்கத்தில் தொடர்ந்து இயங்க முடியாமல் தப்பியோடியவர். விடுதலைப் புலிகளிடம் ஊழல் மோசடிகளில் சிக்கி, பிரபாகரனிடமிருந்து உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தப்பி வந்த நபராவார். பிரபாகரனுடன் ஒன்றாக வாழ்ந்த நபர் என்பதற்காக அவர் பிரபாகரனின் வீடு இருந்த இடத்தையேனும் கூறவில்லை. எங்கள் இராணுவத்தினர்தான் புதுக்குடியிருப்பில் பிரபாகரனின் வீட்டைக் கண்டுபிடித்தார்கள். அவரை வீரனாக்கியது மஹிந்த ராஜபக்ஷதான்.” – என்று சரத் பொன்சேகா தெரிவித்தார். (ஓ)

## வவுனியாவில் இ.போ.ச. சாரதி மீது ஐவர் கொண்ட குழுவினர் தாக்குதல்

### படுகாயமடைந்தவர் வவுனியா வைத்தியசாலையில்

வவுனியா, ஜன.30

வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்துச் சாரதி ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த அவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா இ.போ.ச. சாலையில் சாரதியாகக் கடமையாற்றும் திருமணி திருச்செல்வம் (வயது 43) என்பவரே தாக்குதலில் படுகாயமடைந்தவராவார்.

மேற்படி சாரதி நேற்று விடுமுறையில் நின்றார். அவர் பிற்பகல் 3.30 மணியளவில் வவுனியா இலுப்பையடிப் பேருந்து தரிப்பிடத்திலிருந்து சுந்தரபுரம் செல்லும் பேருந்தில் ஏறினார். பேருந்து சற்று நேரம் தரித்து நின்றது.

அதன்போது ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவினர் பேருந்துக்குள் ஏறி அந்தச் சாரதியைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த சாரதி உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சேர்க்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வரணியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் கைதான அறுவரில் மூவர் குற்றத்தை ஏற்றனர்

### ஏனைய மூவரின் கைவிரல் அடையாளங்கள் பரிசோதனைக்கு உத்தரவு

தென்மராட்சி வரணிப் பகுதியில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கில், எதிரிகள் மூவர் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். ஏனைய மூவர் ஏற்றுக்கொள்ள மறுத்தமையால் அவர்களின் கைவிரல் அடையாளங்களைச் சோதனைக்கு உட்படுத்த நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பவதினத்தன்று வரணியில் உள்ள வயோதிபர் வீடொன்றுக்குச் சென்ற கொள்ளையர்கள் முதலில் தங்களை வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் முகவர்கள் என்று அறிமுகப்படுத்தினர். பின்னர் வீட்டில் வயோதிபப் பெண் மட்டுமே இருந்ததை அறிந்த அவர்கள் அவரைத் தாக்கிக் கட்டிலுடன் கட்டிவிட்டு 13 பவுண் நகை மற்றும் 10 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றனர்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் யாழ்.நகரில் உள்ள நகைக்கடை உரிமையாளர் உட்பட ஆறு பேரைக் கைது செய்தனர். அவர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர். விசாரணைகளின்பின்னர் நகைக்கடை உரிமையாளரும் வாகனச் சாரதியும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனைய நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்டபோது மூவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். ஏனைய மூவரும் தாங்கள் சுற்றவாளிகள் என்று தெரிவித்தனர்.

இதனையடுத்து சுற்றவாளிகள் என்று கூறியவர்களின் கைவிரல் அடையாளங்களைப் பெற்று தடயவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்த நீதிவான் உத்தரவிட்டார். தீர்ப்பு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி வழங்கப்படும் என்று கூறிய நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார். (ம-09)

## அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவம் முல்லைத்தீவில் நேற்று விழிப்புணர்வு

உள்ளூராட்சி அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் விழிப்புணர்வுச் செயற்பாடு நேற்று முல்லைத் தீவில் இடம் பெற்றது.

முல்லைத்தீவு நகரம் மற்றும் தண்ணீரூற்று வாராந்த சந்தைப் பகுதி, மல்லாவி நகரம் ஆகியவற்றில் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம் பெற்றன.

மேற்படி செயற்றிட்டம், மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தால் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நகரங்களில் கையெழுத்துக்கள் சேகரித்தவாறு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. இந்தச் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகவே முல்லைத்தீவிலும் விழிப்புணர்வுச் செயற்பாடு நடைபெற்றது.

கடந்த 18 ஆம் திகதி காலியில் ஆரம்பமான இந்தக் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கையும் விழிப்புணர்வுச் செயற்பாடும் எதிர்வரும் பெப்ரவரி 03 ஆம் திகதி தலைமன்னாரில் நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-81)

### திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து காப்பாற்றினர்.

மேற்படி மூவரும் நேற்று மாலை 4 மணியளவில் கடலுக்கு நீராடச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது. நீராடிக் கொண்டிருந்தபோது அலையொன்று அவர்களை அடித்துச் சென்றது எனவும் தெரியவருகின்றது.

காணமற்போன இரு இளைஞர்களும் திருகோணமலை செல்வநாயகபுரம் பிரதேசத்தை சேர்ந்த 24 மற்றும் 26 வயதுகளை உடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## யானைத் தந்தங்களுடன் இரண்டு பேர் கைதாகினர்!

கல்கிரியாகம – அம்பகஸ்வெளபகுதியில் யானைத்தந்தங்களைக் கொண்டுசென்ற இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராஜாங்கனை மற்றும் சாலியவெள ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய வீதியால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனையிட்ட போது அதில் இரு யானைத்தந்தங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இந்த யானைத் தந்தங்களை 20 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்வதற்காகக் கொண்டு சென்றுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இவர்களை கெக்கிராவ நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தியபோது இருவரையும் பெப்ரவரி 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கெக்கிராவ நீதிவான் ஏ.சோமரத்ன உத்தரவிட்டார். (ஓ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.